கூர்மை

கிழக்குப் பல்கலைக்கழக
நூலக வாரத்தினை முன்னிட்டு
வெளிவரும் சிறப்பிதழ்

பொருளியல் துறை,
வணிக முகாமைத்துவ பீடம்,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
இலங்கை

Coormai A News letter Published by the Department of Economics, Faculty of Commerce & Management, Eastern University

COORMAI

பொருளியல் செய்தியேடு ஜூன் 2001 இதழ்: 10

Editorial Team

MR. K.THAMBIAH
Head, Dept. of Economics
Eastern University, Sri Lanka.

MRS. K.KARUNANITHY
Lecturer, Dept. of Economics
Eastern University, Sri Lanka.

MR. S.JAYARAJAH
Lecturer, Dept. of Economics
Eastern University, Sri Lanka.

MR. A.SOUNDARALINGAM
Lecturer, Dept. of Economics
Eastern University, Sri Lanka.

Advisor

MR. N.LOGESWARAN
Dean,
Faculty of Com. & magt.
Eastern University, Sri Lanka.

Contact Address

Editorial team
Coormai
Department of Economics,
Faculty of Com. & Magt.
Eastern University, Sri Lanka.
Chenkalady.

எங்கள் இதயங்களிலிருந்து.....

கிழக்குப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தின் பொருளியல் துறையினால் வெளியிடப் படும் கூர்மை செய்தியேட்டினது பத்தாவது இதழினை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி அடைகின்றோம்.

கிழக்குப்பல்கலைக்கழக நூலக வாரத்தினை யொட்டி இவ்விதழானது சிறப்பிதழாக வெளிவருகின்றது. இதுவரை வெளிவந்த இதழ்களைவிட மேலும் மெருகூட்டப்பட்டுள்ளதுடன். அச்சுப் பதிப்பாகவும் வெளிவருகின்றது.

"அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையும். இலங்கைப் பொருளாதாரத்தில் அதன் தாக்கமும்" எனும் சிறப்புக்கட்டுரையுடன் நூலக வாரத்தினை சிறப்பிக்கும் முகமாக நூலகம் தொடர்பான கட்டுரையினையும். மேலும் பல பொருளியல் அம்சங்களையும் உள்ளடக்கி வெளிவருகின்றது.

கூர்மை பொருளியல் செய்தியேட்டினை தொடர்ந்தும் வெற்றிகரமாக வெளியிடுவதற்கு பல்வேறு வகைகளிலும் உதவியவர்களுக்கும் இவ்விடத்தில் நன்றி கூறுகின்றோம். வணிக முகாமைத்துவ பீட பீடாதிபதி. துறைத்தலைவர்கள். பொருளியல் துறைசார்ந்த விரிவுரையாளர்கள். கல்வியணிசாரா ஊழியர்கள் அனைவருக்கும் எமது நன்றிகள். மேலும். கூர்மைக்கு ஆர்வத்துடன் ஊக்கமளிக்கும் வாசகர்களுக்கும் இதயபூர்வமான நன்றிகள் என்றும் உண்டு.

எதிர்வரும் காலங்களிலும் கூர்மையினை தொடர்ந்து வெளிக் கொணர்வதற்கு வாசகர்களது ஆதரவினை வேண்டி நிற்பதோடு. கூர்மை பற்றிய ஆலோசனைகள். அபிப்பிராயங்களையும் உங்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம்.

நன்றி

ஆசிரியர்குழு

வாழ்த்துச் செய்தி

கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பொருளியல் துறை வெளியிடும் பொருளியல் செய்தியேடான "கூர்மை" கடந்த காலங்களில் கிரமமாக வெளிவந்துள்ளது. இது பெரிதும் பாராட்டுக்குரியது. பல்கலைக்கழக மட்டத்தில் நடைமுறைக் கல்வி சார் தகவல்களை உடனுக்குடன் பெற்றுக் கொள்ள தேவையான வெளியீடுகள் விரிவுரையாளர்களுக்கும், மாணவர்களுக்கும் அத்தியாவசியமானதோர் தேவையாகும்.

பொருளியல் சார்ந்த கட்டுரைகள் அத்துறைசார்ந்த சிரேஷ்ட விரிவுரையாளர்களாலும், பேராசிரியர்களாலும் கடந்த காலங்களில் "கூர்மை" பொருளியல் செய்தியேட்டின் வாயிலாக வெளியிடப்பட்டு வந்துள்ளது. நாட்டில் அவ்வப்போது ஏற்படும் பொருளாதார அபிவிருத்தித் திட்டங்கள், கொள்கைகள், அவற்றின் செய்முறையில் ஏற்படும் மாற்றங்கள் என்பன பற்றி அவ்வப்போது ஆய்வாளர்கள் ஆராய்ந்து எழுதும்போது பயனுள்ள தகவல்கள் பரிமாறப்படுகின்றன. அவை மாணவர்களுக்குக் கிட்டும்போது தாம் பெற்ற அறிவு பற்றி அவர்களால் நம்பிக்கையுடன் கல்வியைத் தொடர முடிகின்றது. பொருளியல் துறையைப் போன்று அனைத்துக் கல்வித் துறையினரும் இவ்வாறான வெளியீடுகளைப் பிரசுரித்து வெளியிடும்போது மாணவர்கள் பெரிதும் பயனடைவார்கள்.

"கூர்மையின்" பத்தாவது வெளியீட்டிற்கு பொறுப்பான அனைத்துச் சாராரும் பாராட்டுக்குரியவர்கள். இச்செய்தியேடு கூடிய மெருகுடனும், கூடிய கட்டுரைகளுடனும் தொடர்ந்தும் வெளிவர வேண்டுமென வாழ்த்துவதில் பெரு மகிழ்ச்சி அடைகின்றேன்.

பேராசிரியர். மா. செ. மூக்கையா
துணைவேந்தர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

ஆசிச் செய்தி

பல்கலைக்கழகங்கள் தம் சமூகத்திற்குப் பல்வேறு சேவைகளை வழங்க வேண்டியுள்ளதுடன், அச்சமூகத்தின் தேவைகளையும் நிறைவேற்ற வேண்டிய பாரிய பொறுப்பைக் கொண்டுள்ளது. எமது வணிக முகாமைத்துவ பீடத்தில் பொருளியல் துறை ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து கல்விசார் நடவடிக்கைகளிலும், பிறக் கிருத்திய செயற்பாடுகளிலும் இத்துறை கூடிய கவனமெடுத்து வருகின்றது. 1992ம் ஆண்டிலிருந்து "கூர்மை" பொருளியல் செய்தியேட்டின் மூலமாக மாணவர் சமுதாயத்திற்கு பல்வேறு நடைமுறை விடயங்களை வழங்கி வருகின்றமை பாராட்டத்தக்க விடயமாகும். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலும் கிழக்குப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்திலிருந்து வெளிவரும் இவ்விதழ் மாணவர் சமுதாயத்தினரால் வரவேற்கப்படுகின்றது.

மேலும் கிழக்குப் பல்கலைக்கழக நூலக வாரத்தினை முன்னிட்டு சிறப்பிதழாக வரும் கூர்மையின் 10வது இதழ் தொடர்ந்து வெளிவந்து மாணவர் சமுதாயத்திற்கும், எமது சமூக வளர்ச்சிக்கும் தொடர்ந்தும் துணை நிற்க வேண்டும்.

கிழக்குப் பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடத்தின் பொருளியல் துறையினரால் வெளியிடப்படும் 10வது "கூர்மை" பொருளியல் செய்தியேட்டிற்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

ந. லோகேஸ்வரன்
பீடாதிபதி,
வணிக முகாமைத்துவ பீடம்
கிழக்குப் பல்கலைக்கழகம்.

பொருளியல் துறைத் தலைவரின் செய்தி

எனது துறையினால் வெளியிடப்படும் "கூர்மை" செய்தியேடு 10வது இதழாக தனது வளர்ச்சியை எட்டிப் பிடித்துள்ளமையைக் கண்டு பெருமைப்படுகின்றேன். இவ்விதழை ஆரம்பித்து வெளிக் கொண்டு வருவதிலும், இதனைத் தொடர்ந்து வெளியிடுவதிலும் எனக்குக் கணிசமான பங்குண்டு என்பதனால் கடந்த 7 ஆண்டுகட்கு மேலாக இது இடைவிடாது வருவது கண்டு பெரு மகிழ்ச்சியழ்ச்சியடைகின்றேன். இலங்கை பூராகவும் இருந்து பொருளியல் தொடர்பான பல்வேறு சஞ்சிகைகள், காலாண்டு இதழ்கள் அவ்வப்போது வெளிவந்த போதிலும் தமிழில் வெளிவரும் ஒரேயொரு பொருளியல் செய்தியேடு என்பதால் கிழக்குப் பல்கலைக்கழக பொருளியல் துறைக்கும், வர்த்தக முகாமைத்துவ பீடத்திற்கும் தனிப் பெருமை உண்டு. இச்செய்தியேடானது அவ்வப்போது க.பொ.த. உயர்தர பிரிவின் பொருளியல் மாணவர்கள், கற்பிக்கும் ஆசிரியகள், பல்கலைக்கழக மாணவர்கள், பொதுப் பரீட்சையை எதிர் கொள்வோர் ஆகியோர்க்கு தேவையான நடைமுறைப் பொருளியல் அறிவை வழங்குவதில் சழைக்காது உழைத்து வருகின்றது. இந்த வகையில் இதன் வளர்ச்சிக்குப் பங்காற்றி வரும் எனது துறை விரிவுரையாளர்கள், எமது பீடாதிபதி, ஏனைய துறைத் தலைவர்கள், விரிவுரையாளர்கள் ஆகியோருக்கும் எனது நன்றியும், வாழ்த்துக்களும் என்றும் உண்டு.

முழுக்க முழுக்க சமுதாய நலனை அடிப்படையாகக் கொண்டு வெளிவரும் இவ்விதழ் காலத்தின் தேவை என்பதனையும், கட்டாயமானது என்பதனையும் கடந்த கால அனுபவங்கள் எமக்கு உணர்த்தி வருகின்றன. கூர்மை தான் வளர்ந்து வந்த பாதையில் நிலைத்து நிற்கும் போக்கை எட்டியுள்ளது. இதனால் இதன் வளர்ச்சி மேலும் விரிவடையும் என்பதும், பலருக்கும் பயனளிக்கும் என்பதும் எனது திடமான நம்பிக்கை. கிழக்குப் பல்கலைக்கழக நூலக வாரத்தினை முன்னிட்டு வெளிவரும் இப்பத்தாவது இதழுக்கு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

கே. தம்பையா
தலைவர்
பொருளியல் துறை
கிழக்குப் பல்கலைக்கழகம்.

அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையும், இலங்கைப் பொருளாதாரத்தில் அதன் தாக்கமும்

அறிமுகம்

1980களில் இருந்து சர்வதேச மட்டத்தில் தீவிரமடைந்துவரும் உலகமயமாக்கல் அணுகுமுறைகளில் பிரதான மாற்றமாக அமைப்பு சார் சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. இவை அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் மாத்திரமன்றி வெற்றிகரமாக தம்மை வளர்த்துக் கொண்ட சோசலிசப் பொருளாதாரங்களில் கூட அவை எதிர் கொண்ட பொருளாதாரத் தோல்வியிலிருந்து மீண்டெழுந்து சந்தைப் பொருளாதாரங்களுடன் தம்மை இணைத்துக் கொள்வதற்கான ஒரு வழிமுறையாக அமைப்பு சார் சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் இருந்து வந்துள்ளன. வேறொரு வகையில் கூறினால் பெருஞ் சந்தை நோக்கிய மாற்றங்களும், அதனால் ஏற்பட்ட தாராள மயமாக்கல் முறைகளும் உலக நாடுகள் பலவற்றில் இவ்வித அமைப்பு சார் சீராக்கல் முறைகளின் ஊடாக கொண்டு வரப்பட்டவையாகவே உள்ளன.

இதனால் 1980ம் ஆண்டின் பின்னர் அமைப்பு சார் சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பான கொள்கைகள், கருத்துக்கள் சர்வதேச அளவிலும், அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் மட்டத்திலும் பெரும் விவாதங்களையும், சர்ச்சைகளையும், கருத்து வேறுபாடுகளையும் உருவாக்கிய ஒரு கொள்கை முறையாக இருந்து வருகின்றது. சர்வதேச நிதி நிறுவனங்களான (IFIs) உலகவங்கியும்(IBRD), சர்வதேச நாணய நிதியமும்(IMF) சர்வதேச பொருளாதாரத்திற்கு முன்வைத்த இக் கொள்கைத் திட்டங்கள் இன்றைய வளர்முக நாடுகளின் பொருளாதாரச் செயற்பாடுகளில் ஒரு பிரதான கொள்கையாகச் செயற்பட்டு வருகின்றது.

குமாரவேல் தம்பையா
B.A (Hons) PGDE.M.Phil.
முதுநிலை விரிவுரையாளர்
கிழக்குப்பல்கலைக்கழகம்

சர்வதேச நாணய நிதியமும்(IMF), உலக வங்கியும்(IBRD), இணைந்து 1980இல் இருந்து நடைமுறைப்படுத்தி வரும் பிரதான கொள்கை முறையாக உறுதிப்படுத்தல் கொள்கை சீராக்கம் (SSA) காணப்படுகின்றது. இது மூன்றாம் மண்டல நாடுகள், கிழக்கு ஐரோப்பிய நாடுகள் உட்பட 70 நாடுகளில் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது.

உண்மையில் அமைப்பு ரீதியான சீராக்கல்களின் பின்னணியில் இருந்து வரும் தத்துவம் மூன்றாம் மண்டலப் பொருளாதாரங்களை உலக மயமாக்குவதாகும். இங்கு மூன்றாம் மண்டல நாடுகளில் இடம் பெறும் சீராக்கல் அல்லது உறுதிப்படுத்தலுடான உலக மயமாக்கலானது இந்நாடுகளின் பொருளாதாரங்களை உலக சந்தைக்குத் திறந்து விடுவதனூடாக இந்நாடுகளையும், அவற்றின் சந்தைகளையும், அதன் உற்பத்தியாளர்களையும் உலக மூலதனத்துடனும், சர்வதேசப் பொருட் சந்தைகளுடனும் இணைத்து விடுகின்ற முயற்சியாக உள்ளது. இதனால் சந்தை மீதான அனைத்துக் கட்டுப்பாடுகளையும் நீக்கி சந்தைச் சக்திகள் உலக மயமாதலை ஊக்குவிப்பதாயும் உள்ளது. இவ்வகையில் அமைப்பு ரீதியான சீராக்கலின் மற்றொரு பகுதியாக இது சந்தை சீராக்கல் கொள்கையாகவும் இடம் பெறுவதாக உள்ளது. எனது இக்கட்டுரையானது இப்புதிய கொள்கையின் உலகளாவிய பரிமாணங்களை விளக்குவதோடு இலங்கைப் பொருளாதாரத்தில் இக்கொள்கையின் செல்வாக்கை எடுத்துக் காட்டுவதாகவும் இருக்கும்.

அமைப்பு ரீதியான சீராக்கலின் பின்னணி

1970 களின் முன்னர் அபிவிருத்தியடைந்து வரும் மூன்றாம் மண்டல நாடுகள் எதிர் நோக்கிய பிரச்சினைகளை அனேக பொருளியலாளர்களும், சர்வதேச நிறுவனங்களும் குறுங்காலப் பிரச்சினைகளாய் கருதியதுடன் அவற்றிற்கான தீர்வுத் திட்டங்களையும் குறுங்கால அடிப்படையிலேயே நோக்கின. இப்பிரச்சினைகளுக்கு சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் குறுங்காலக் கடன்களை வழங்கி வந்த போதிலும் அத்தகைய நிதியுதவிகள் எந்தவிதத்திலும் இப்பிரச்சினைகட்கு தீர்வு காண முயற்சிக்காததோடு இத்தகைய நிதி வசதிகள் இந்நாடுகளின் பேரினப் பொருளாதாரச் சீர்திருத்தங்களுடன் இணைக்கப்பட்டிருக்கவில்லை. மறுபுறத்தில் நீண்ட காலப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மேற்படி நிறுவனங்களால் பாய்ச்சப்பட்ட நிதியுதவிகள் அவற்றை சரியான முறையில் வெற்றியடைய வழிவகுக்கவில்லை. மாறாக இந்நாடுகளின் நீண்ட காலப் பிரச்சினையான சென்மதி நிலுவைப் பிரச்சினை மேலும் மோசமடைந்தே வந்தது. இத்தகைய பிரச்சினைகள் 1970லும், 1973லும் ஏற்பட்ட சர்வதேச எண்ணெய் நெருக்கடி காரணமாயும், 1970களின் பிந்திய உலக பொருளாதார பின்னடைவு காரணமாகவும் தீவிரமடைந்ததுடன் இந்நாடுகளில் நடைமுறைப் படுத்தப்பட்ட பல பேரின ரீதியான செயற்றிட்டங்களும் தோல்வியடையும் நிலையை உருவாக்கி இருந்தது. இப்பிரச்சினைகள் வளர்முக நாடுகட்கு மேலாக எண்ணெய்யை இறக்குமதி செய்யும் எல்லா நாடுகளிலும் பல பொருளாதார இடர்களை ஏற்படுத்தியிருந்தது. இந்நிலமைகள் அனைத்தும் 1980களின் அளவில் உச்ச நிலையை அடைந்திருந்தன. இவ்வாறான ஒரு நிலையில் பேரினப் பொருளாதாரக் கட்டமைப்பிற்குள் செயற்படுத்தப்படும் எந்தவொரு வெற்றிகரமான செயற்றிட்டம்கூட தோல்வியடைய வேண்டிய ஒரு நிலை ஏற்படும் என்பதை சர்வதேச நாணய நிதியமும், உலக வங்கியும் வலியுறுத்தி இருந்தன. எண்ணெய் நெருக்கடியைத் தொடர்ந்து எல்லா வளர்முக நாடுகளிலும் ஏற்பட்ட பிரச்சினைகள் உள்நாட்டுக் கொள்கைகளிலும், நிறுவன அமைப்புக்களிலும் தொடர்ச்சியான பலவீனங்கள் பலவற்றிற்கு காரணமாக இருந்தது என்பது உணரப்பட்டது. இதனால் இந்நாடுகள் எதிர் கொள்ளும் பிரச்சினைகட்கும், அவற்றிற்கான தீர்வுகளின் பலவீனங்கட்கும் இந்நாடுகள் அடிப்படையில் கொண்டுள்ள அமைப்பு ரீதியான பிரச்சினைகளே காரணம் எனக் கண்டறியப்பட்டது. எனவே இந்நாடுகளின் பொருளாதாரக் கட்டமைப்பின் அடிப்படைச் செயற்பாடுகளை இலக்காகக் கொண்ட மாற்றுக் கொள்கைகள் மூலமே தீர்வுகாண முடியும் என விதந்துரைக்கப்பட்டது. இதன் பொருட்டு உள்ளார்ந்த ரீதியாகவும், வெளிச் சக்திகளாலும் கவரக் கூடிய தீர்வுத் திட்டங்களாக அவை இருக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்தகைய தீர்வுத் திட்டங்கள் எதிர் காலச் சவால்களையும், அவற்றினால் ஏற்படக் கூடிய அதிர்ச்சிகளையும் எதிர் கொள்ளக் கூடியதாக இருத்தல் அவசியமானதாகும். இவ்வாறான ஒரு தீர்வு வழிமுறையாக அறிமுகப்படுத்தப்பட்டதாகவே அமைப்பு சார் சீராக்கல் இருந்தது. வளர்முக நாடுகளைப் பொறுத்தவரை 'சீராக்கல்' (Adjustment) என்பது ஆரம்பத்தில் சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தினால் நிதி வழங்கல் முறையின் பொருட்டு பயன்படுத்தப்பட்ட ஒரு பதமாகவே இருந்தது. ஆனால் இன்று அமைப்பு சார் சீராக்கல் முறைகள் முழுப் பொருளாதாரத்தையும் உறுதியாக வைப்பதற்கான எல்லா வகையான சீராக்கல் வழி முறைகளையும் கடைப்பிடிக்கப்படுவதாக உள்ளது.

இவ்வாறான சீராக்கல் கொள்கைகள் பொருளாதாரத்தை அதிகளவிற்கு செயற்றிறன் மிக்கவையாக மாற்றி சந்தைச் சக்திகளின் மாற்றச் செயற்பாடுகளிற்கேற்ப மூலவளங்களை ஒன்றாகத் திரட்டி பகிர்வதற்கு வழி செய்வதாய் அமைகின்றது. குறிப்பாக மூன்றாம் மண்டல நாடுகள் எதிர் கொள்ளும் பேரின ரீதியான நெருக்கடிகளான சென்மதி நிலுவை நெருக்கடி, விலைத் தளம்பல்கள், சமமற்ற பொருளாதார வளர்ச்சி, வேலையின்மை நிலமைகள், நாணய மாற்றுவீதத்தில் ஏற்படும் ஏற்ற, இறக்க நிலமைகள், துறைகளுக்கிடையிலான ஏற்றத் தாழ்வுகள் என்பவற்றை குறைத்து உறுதியான பொருளாதாரச் செயற்பாடுகளுக்கு வழிவகுக்கும் எனவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

சென்மதி நிலுவைப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு குறுங்காலக் கடன்களை வழங்கல், வரவு செலவுத் திட்டக் குறைநிலையைக்

குறைத்தல் அல்லது நீக்கல், நாணய மாற்று வீதத்தைச் சீராக்கல், சர்வதேசப் படுகடன்களில் இருந்து மூன்றாம் மண்டல நாடுகளை விடுவித்தல், தேசிய பொருளாதாரத்தில் அரசு கொண்டுள்ள பங்கினைப் படிப்படியாகக் குறைத்தல், வர்த்தகம், நிதி ஆகியவற்றை தாராள மயப்படுத்தல், சமூக நலச் செலவீடுகளையும், மானியங்களையும் குறைத்தல், விலைக் கட்டுப்பாட்டை நீக்குதல், ஊழியச் சந்தையைத் தாராள மயப்படுத்தல், வெளிநாட்டு முதலீடுகளை வரவழைக்கக் கூடிய வகையில் மூலதனச் சந்தையை தாராள மயப்படுத்தல் ஆகியவற்றை இச்சீர்திருத்தங்கள் அடிப்படையாகக் கொண்டிருந்தன.

அமைப்பு ரீதியான சீராக்கம் கருத்தும், விளக்கமும்

1980கட்கு முன்பு 'சீராக்கல்' என்ற பதம் பெருமளவிற்கு மூன்றாம் மண்டல நாடுகளில் அவற்றின் சென்மதி நிலுவை தொடர்பான பிரச்சினைகளுக்கு மாத்திரம் தொடர்புபடுத்தி பயன்படுத்தப்பட்டு வந்தது. இங்கு மறுசீரமைப்பு (Reforms) என்பது 'சீராக்கல்' (Adjustment) என்பதில் இருந்து வேறுபடுவதாய் உள்ளது. மறுசீரமைப்பு என்பது இருக்கின்ற ஒரு கொள்கை முறையை திருத்தங்களுடன், அல்லது சில மாற்றங்களுடன் சீர்திருத்துவதாய் அமையும். உதாரணமாக வர்த்தக மறுசீரமைப்பு. ஆனால் சீராக்கல் என்பது அடிப்படையில் பொருத்தமானவிடத்து அமைப்பை மாற்றுவதாய் அமையும். இங்கு அமைப்பு ரீதியான சீராக்கலின் ஒரு பகுதியாகவே மறுசீரமைப்பு என்பது காணப்படுவதாய் உள்ளது. அமைப்பு சார் சீராக்கல் முறையை உலக வங்கி பின்வருமாறு வரையறை செய்கின்றது.

> " இது கொள்கைகள் மற்றும் நிறுவனங்களின் சீர்திருத்தங்களை உள்ளடக்கியதாகும். வரிகள் போன்ற பேரண்டப் பொருளியல் தீர்வுகள் உட்பட பொதுத் துறைத் திறமையின்மை போன்ற நிறுவன ரீதியான சீர்திருத்தங்களுடன் ஒரு நாட்டின் பொதுத் துறை மற்றும் தனியார் துறை நிறுவனங்களை தனிப்பட்ட முறையிலும், கூட்டாகவும் உற்பத்தித் திறன் கொண்டவையாகவும், அபிவிருத்திக் குறிக்கோள்களுக்கு அடிப்படையில் பங்களிப்புச் செய்யக் கூடியவையாகவும் அத்துறைகள் அனைத்தையும் அடக்கிய விதத்தில் மீளமைப்பு செய்து, நிர்வகித்து ஒருங்கிணைப்பதாகும். அவ்வாறு செய்வதன் மூலம் பேரினப் பொருளாதாரச் செயற்பாடுகளில் உறுதித் தன்மையைப் பேண முடிவதோடு நிலைத்து நிற்கத்தக்க வகையில் பொருளாதார வளர்ச்சியையும், பொருளாதார அபிவிருத்தியையும் கொண்டு செல்லக் கூடியதாக இருக்கும்."
> (உலக வங்கி ஆண்டறிக்கை - 1989)

அமைப்பு ரீதியான சீராக்கல் நடவடிக்கைகள் தொடர்பாக கருத்து விளக்கத்தை முன்வைக்கும் பொருளியலாளர்கள் உறுதிப்படுத்தல், அமைப்பு ரீதியான சீராக்கல் ஆகிய இரு பதங்களும் ஒன்றிற்கொன்று இணையான விதத்தில் அடிக்கடி பயன்படுத்தப்பட்டு வருகின்றன எனக் குறிப்பிடுகின்றனர். சில சமயங்களில் உறுதிப்படுத்தலையும், அமைப்பு ரீதியான சீராக்கல் வழிமுறைகளையும் குறிப்பதற்காகவும் அமைப்பு ரீதியான சீராக்கல் என்ற பதம் பயன்படுத்தப் படுவதும் உண்டு. கொள்கை வகுப்போர் மட்டத்தில் இவ்விரண்டு பதங்களும் வேறுபட்டவையாக இருந்து வந்த போதிலும் இவை இரண்டும் மொத்தக் கேள்வி, மொத்த நிரம்பல் தொடர்பாக ஏற்படக் கூடிய ஏற்றத் தாழ்வுகளையும், சமமின்மைகளையும் சீராக்கக் கூடிய தன்மை வாய்ந்தவையாய் உள்ளன. அதாவது இங்கு பணவீக்கத்தைக் குறைத்தல், போட்டித் தன்மையை உருவாக்கி செயற்றிறனை அதிகரித்தல், சென்மதி நிலுவை சார்பான குறைநிலையைக் குறைத்தல் அல்லது நீக்கல், சர்வதேச ஒதுக்கீடுகளின் இழப்பீட்டினைத் தவிர்த்தல் அல்லது குறைத்தல் என்பவற்றினூடாகவும், பொதுச் செலவுக் குறைப்பு, நாணய மாற்று வீத முறைகளில் உறுதிப் பாட்டினைக் கொண்டுவருதல் ஆகியவற்றின் வழியாகவும் பேரினப் பொருளாதாரத்தின் சமனிலை யின்மையை நீக்கி முழுப் பொருளாதாரத்தையும் உறுதிப்படுத்தல் என்பதையே அமைப்புச் சீராக்கல் என்பது குறிக்கின்றது.

அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையின் முறைகள்

பொதுவாக அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையின் கீழ் நாணயக் கொள்கை, நிதிக்

கொள்கை சார்ந்த விடயங்களுடன், நாணய மாற்று வீதச் சீர்திருத்தங்களும், வர்த்தக சீராக்கல் கொள்கைகளும் இடம் பெறுகின்றன. இவற்றிற்கு மேலாக அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அமைப்பு சார் சீராக்கல் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நிறுவன ரீதியான சீராக்கல் என்ற அடிப்படையில் தனியார் மயமாக்கல் முறை பிரதான ஒரு மாற்றமாக முன்னெடுத்துச் செல்லப்படுகின்றது. அமைப்பு சார் சீராக்கல் கொள்கைகளின் கீழ் வளர்முக நாடுகளில் இடம் பெற்ற பிரதான ஒரு செயற்பாடாக வர்த்தகத்தை சீராக்கும் கொள்கை இடம் பெற்று வருகின்றது. இதன் கீழ் ஏற்றுமதி மேம்பாடு, இறக்குமதி தாரளமயமாக்கல் என்பவற்றை உள்ளடக்கிய வர்த்தகக் கொள்கைகள் இடம் பெற்று வருகின்றன. இவற்றின் கீழ் அந்நியச் செலாவணிச் சீர்திருத்தங்கள், அந்நியச் செலாவணிச் சந்தைகளை விரிவாக்குதல், ஏற்றுமதி வரிகள், தீர்வைகள் என்பவற்றில் குறைப்பை மேற்கொள்ளுதல் அல்லது நீக்குதல், ஏற்றுமதிக் கோட்டா முறைகளைத் தளர்த்துதல், ஏற்றுமதி யாளர்களுக்கான மானிய வசதிகளையும், ஏனைய நிதிசார் ஊக்குவிப்புக்களையும் அறிமுகம் செய்தல், ஏற்றுமதியாளர்களுக்கான கடன் வசதிகளை விருத்தி செய்தல், ஏற்றுமதியாளர்களை ஊக்குவிக்கும் வகையில் தீர்வையற்ற இறக்குமதி வசதிகளை வழங்குதல் என்பவற்றின் ஊடாக ஏற்றுமதியில் மேம்பாட்டினை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கும் அதேசமயம் ஏற்றுமதி அபிவிருத்தி நிதியங்களை ஸ்தாபித்தல், சுதந்திர வர்த்தக வலயங்களை நிறுவுதல், ஏற்றுமதி செயற்பாட்டு வலயங்களை உருவாக்குதல், ஏற்றுமதிக்கான கிராம மட்ட நிறுவன அமைப்புக்களை உருவாக்குதல் என்பன போன்ற நிறுவன ரீதியான சீராக்கல் முறைகளும் உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இம்மாற்றங்கள் சீரமைக்கப்பட்ட வகையிலான ஏற்றுமதி மேம்பாட்டினை உருவாக்க வழிவகுக்கும்.

கோட்டாக்கள் மற்றும் ஏனைய இறுக்கமான கட்டுப்பாடுகளைத் தளர்த்துவதன் மூலமும் அல்லது முற்றாக நீக்குவதன் மூலமும், தீர்வைகள் மற்றும் பாதுகாப்பு முறைகள் என்பவற்றை விவேகமான முறையில் கையாளுவதன் மூலமும் இறக்குமதி சார்பான நடைமுறைகளில் சாதகமான மாற்றங்களை உருவாக்கி இறக்குமதி தாராள மயமாக்கலுக்கான சீராக்கல் வழிமுறைகளை மீதான சீராக்கலானது பெரும்பாலான பொருளாதாரங்களை அவற்றின் ஆரம்ப நிலையில், பெருமளவு வெற்றியடைவதற்கு தவறியதுமான உள்நோக்கிய உபாயத்தில் இருந்து வெளிநோக்கியதான வர்த்தக முறையைக் கையாளவும், வர்த்தகத்தைப் படிப்படியாகத் தாராள மயமாக்கவும் உதவுவதாக அமையும்.

அமைப்பு சார் சீராக்கல் முறைகளில் மற்றொரு நடவடிக்கை நிதித் துறை மறுசீராக்கல் முறைகளாகும். இங்கு முதலீட்டிற்கும் அதனடிப்படையில் எழக் கூடிய வளர்ச்சிக்கும் தேவையான வகையில் நிதித் துறை சீராக்கங்களும், அதன் மாற்றமும் இடம் பெற்றுள்ளன. இங்கு வேறொரு வகையில் கூறினால் அரசிறைக் கொள்ளைகளும், நாணய மற்றும் கொடுகடன் கொள்கைகளும் முக்கியமானவையாய் அமைகின்றன. இவற்றினூடாக மூலவளத் திரட்டல் சாதித்துக் கொள்ளப்படுகின்றது. இத்தகைய மாற்றத்தில் அரசிறைக் கொள்கைகள், வரிகள், செலவு இலக்குகள், மானியக் குறைப்பு மற்றும் பொதுச் செலவீனக் குறைப்பு போன்றவற்றினால் பொது முதலீட்டில் மாற்றம் ஏற்படுத்தலாம். அதேசமயம் பொது முதலீடு விலையிடல், மற்றும் நிறுவன ரீதியான சீர்திருத்தங்கள் என்பவற்றினூடாக மூலவளப் பாவனையின் செயற்றிறன் மேலும் அதிகரிக்க இத்தகைய சீராக்கல் முறைகள் உதவுவதாய் அமையும்.

அமைப்பு ரீதியான சீராக்கலின் மற்றொரு படிமுறை நிறுவன ரீதியான சீராக்கங்களை உள்ளடக்கியதாகும். இதில் பொதுத் துறை நிறுவனங்களை சீர்திருத்துவதாய் அமையும். விரயத்தைத் தவிர்த்தல், செலவுக் கட்டுப்பாட்டை மேற் கொள்ளல், வினைத்திறன், விளைதிறன் என்பவற்றை விருத்தி செய்தல், நுட்ப ரீதியான செயற்றிறன் வாய்ந்த முகாமைத்துவத்தைக் கொண்டுவரல் என்பவற்றின் பொருட்டு பொதுத் துறைச் சீராக்கம் என்பதன் கீழ் தனியார் மயமாக்கல் முறைகள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன.

அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் அமைப்பு சீராக்கத்தின் அவசியம்.

பொதுவாகவே அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் தம்மளவில் பல அடிப்படைப் பிரச்சினைகளைக் கொண்டு காணப்படுகின்றன.

உருவாக்க முடியும். இவ்வாறான வர்த்தகத்தின் இத்தகைய பிரச்சினைகள் சில பொருளியலாளர்களால் அந்நாடுகளின் அடிப்படைப் பண்புகள் என்று இனங் காணக்கூடிய வகையில் நீண்ட காலப் பிரச்சினைகளாகவும் காணப்படுகின்றன. இவை தவிர பொருளாதாரத்தின் உள்ளார்ந்த செயற்பாடுகளாலும், வெளியிலிருந்து வரக்கூடிய அதிர்ச்சிகளாலும் பல குறுங்காலப் பிரச்சினைகட்கும் முகம் கொடுக்க வேண்டியதாய் உள்ளது. நிதிக் கொள்கை சார்பாக ஏற்படக் கூடிய வருமானப் பற்றாக்குறை, செலவீடு என்பன தொடர்பான சமமற்ற நிலமைகள், சென்மதி நிலுவையில் தொடர்ச்சியாகவும், அதிகரித்த அளவிலும் வளர்ச்சியடைந்து செல்லும் பற்றாக்குறை நிலமைகள், உறுதியற்ற நிலையில் சீரான போக்கையும் கொண்டிராத நாணய மாற்றுவீத நெருக்கடிகள், அந்நியச் செலாவணி ஒதுக்குகளின் தொடர்ச்சியான பற்றாக்குறை, மிகப் பெரும் சுமையாக இருந்து வருகின்ற உள்நாடு சார்ந்ததும், சர்வதேசம் சார்ந்ததுமான படுகடன் நெருக்கடிகள், சாதகமற்ற தொடர்ச்சியான பணவீக்க உயர்வு, அதிகரித்த அளவில் செல்லும் வேலையின்மை நெருக்கடிகள், குறைந்த அளவில் காணப்படும் கைத்தொழில் துறையின் வளர்ச்சி, ஸ்தம்பித்த நிலையில் காணப்படும் விவசாயத் துறையின் வளர்ச்சி, வளர்ச்சியடைந்து செல்லும் செயற்றிறனற்ற மூலவளப் பயன்பாடு, செயற்றிறனற்ற முகாமைத்துவத்திற்குட்பட்டுள்ள நிறுவனங்கள், பொதுத் துறைப் பொருளாதாரத்திலும், பகிர்விலும், வருமான முறைகளிலும் காணப்படக்கூடிய மோசமான இடைவெளி, மோசமான தங்கி வாழ்வோர் பிரச்சினையும், அதன் காரணமாக அதிகரித்துச் செல்லும் மானியக் கொடுப்பனவுகளின் அளவும், சமூக நலச் செலவீடுகளின் அதிகரிப்பும், வறுமைக் கோட்டின் கீழான அதியுயர் மக்கள் தொகையும், அவர்களை மீட்டெடுப்பதற்கான சரியான திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படாமையும் போன்ற பல பிரச்சினைகளை மூன்றாம் மண்டல நாடுகள் எதிர் கொண்டு வருகின்றன. இவ்வாறான தொடர் பிரச்சினைகளில் இருந்து இப்பொருளாதாரங்களை மீட்டெடுக்கவும், நிலைத்து நிற்கத்தக்க வகையிலான அபிவிருத்தியை ஏற்படுத்தவும் மேற்படி அமைப்பு சீராக்கல் சிறந்த வழிமுறையாக அமையும் என்பது பொருளியலாளரதும், கொள்கை வகுப்போரதும் திடமான நம்பிக்கையாகும்.

அமைப்பு சார் சீராக்கல் - சில ஆசிய அனுபவங்கள்

1980களின் ஆரம்பத்தில் இருந்து சர்வதேச கடன் வழங்கும் நிறுவனங்கள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் ஒரு பிரதான கொள்கை ரீதியான நடவடிக்கையாக் அமைப்பு ரீதியான சீராக்கல் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி வருகின்றன. அமைப்பு சீராக்கல் தொடர்பான சர்வதேச அனுபவங்கள் நாடுகளுக்கிடையே வேறுப்பட்டவையாக இருந்து வந்துள்ளன. இதற்கு அந்நாடுகள் பேரின ரீதியான கொள்கைப் பிரச்சினைகளின் வேறுபாடும் அவற்றை கொள்கை ரீதியாக அடைவதற்கான அந்நாடுகளின் வேறுபட்ட நோக்கங்களுமே காரணமாக இருந்துள்ளன.

ஆசியாவைப் பொறுத்தவரை ஜப்பான், கொரியா, சிங்கப்பூர், தாய்வான், மலேசியா போன்ற நாடுகளில் சந்தைத் தாராளமயப்படுத்தலின் ஊடாக சீராக்கல் கொள்கை உத்தம மட்டத்தை அடைந்துள்ளதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது. அத்துடன் இக்கொள்கையின் வெற்றிக்காக இந்நாடுகள் கையாண்ட வேறுபட்ட கருவி மூலங்களும் மிகச் சிறந்த அனுபவமாய் உள்ளன. இதனால் இந்நாடுகள் புதிய கைத்தொழில் மய அந்தஸ்தை (NIC's) இலகுவான முறையில் அடையக்கூடிய வாய்ப்பும் உருவானது. இந்தப் பின்னணியில் ஆசியாவில் அபிவிருத்தி அடைந்து வரும் நிலையிலுள்ள சில நாடுகளின் அனுபவங்களை எடுத்து நோக்குதல் இலங்கையின் எதிர் காலப் படிப்பினைக்குப் பொருத்தமானதாய் அமையும்.

வங்காளதேசத்தைப் பொறுத்தவரை 1970களின் மத்தியில் இருந்து ஆரம்பித்த பல பொருளாதார நெருக்கடிகள் 1980களின் தொடக்கத்தில் மிகவும் தீவிரமடைந்து உச்ச நிலையை அடைந்திருந்தது. பேரின ரீதியான உள்ளார்ந்த அமுக்கங்களும், வெளியார்ந்த அமுக்கங்களும் பல பாரிய பொருளாதார இடர்கட்கு இந்நாட்டுப் பொருளாதாரத்தை இட்டுச் சென்றிருந்ததுடன், இந்நாட்டின் பொருளாதார வளர்ச்சியையும் எதிர் மறையான நிலைக்கு உள்ளாக்கி இருந்தது. இதனால் சர்வதேச கடன் வழங்கல் நிறுவனங்களின் சிபார்சின் அடிப்படையில்

இவற்றிலிருந்து பொருளாதாரத்தை மீட்டெடுப்பதற்குரிய ஒரு கொள்கை ரீதியான வழிமுறையாக மேற்படி அமைப்பு ரீதியான சீராக்கல் நடைமுறைகள் கொண்டு வரப்பட்டன.

வங்காளதேசம் 1971 இலிருந்து புதியதொரு நாடாக உருவாகிப் பல்வேறு பொருளாதார இடர்களை தொடராக எதிர் கொண்டு வந்தது. மறுபுறத்தில் வளைகுடாப் போரும், இற்கை அழிவுகளும், அரசியலில் தோன்றிய ஸ்திரமற்ற நிலையும் ஒன்றாக இணைந்து பெரும் பொருளாதார பின்னடைவையும், பேரின ரீதியான இடர்களையும் உருவாக்கி இருந்தன. குறிப்பாக தொடர்ச்சியான வெளிநாட்டு உதவிகளில் தங்கியிருந்தமை, முதலீட்டை பெருக்கத் தேவையான உள்நாட்டு சேமிப்பு மிகக் குறைந்தளவில் இருந்தமை, மிக மோசமான வறுமை நிலை, முதலீட்டின் பொருட்டு உருவாக்கப்பட்ட குறைந்தளவான மிகைகள், இயற்கை மூலவளங்களின் பற்றாக்குறை, மிதமிஞ்சிய குடித்தொகைப் பெருக்கம், பொருளாதார கொள்கைக்களால் அடிக்கடி ஏற்படும் மாற்றங்கள் ஆகியன பிரதான பிரச்சினைகளாக இருந்து வந்தன. இவ்வாறான ஒரு நிலையிலேயே வங்காளதேசம் அமைப்பு ரீதியான சீராக்கல் திட்டம் ஒன்றிற்கு தவிர்க்க முடியாதபடி மாற வேண்டியிருந்தது. இங்கு நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட அமைப்பு ரீதியான சீராக்கல் திட்டம் பின்வரும் நோக்கங்களை அடியொற்றி இருந்தது.

I. பொருளாதாரத்திற்கு வெளியே இருந்து வந்த அமுக்கங்கள் குறைத்து வெளியகச் சமநிலையை பேணல்.
II. வறுமை ஒழிப்பிற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தல்.
III. உயர் பொருளாதார வளர்ச்சியை அடையக் கூடிய விதத்தில் பொருளாதாரத்தின் எல்லா மட்டங்களிலும் சீராக்கங்களை மேற்கொள்ளல்.

இதற்காக பின்வரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.

I. வரவு செலவுத் திட்டத்தில் சரியான முறைமைகளை கொள்ளக்கூடிய விதத்தில் சீர்திருத்தங்களைக் கொண்டுவரல்.
II. நாணயத் துறையை அபிவிருத்தி செய்யக் கூடிய விதத்தில் கொள்கைகளை மாற்றுதல்.
III. செலாவணி விகிதக் கொள்கைகளில் சீர்திருத்தங்களைக் கொண்டு வருதல்.
IV. தனியார் மயமாக்கல் நடவடிக்கைகளை விரைவுபடுத்தல்.

வங்காளதேசத்தில் இத்தகைய சீர்திருத்தங்களை மேற்கொண்டதன் பின்னர் பின்வரும் மாற்றங்கள் அடையப்பட்டதை கண்டறிய முடிந்துள்ளது.

I. பணவீக்க வீதத்தை 1.3% என்ற அதிகுறைந்த மட்டத்திற்கு கொண்டு வரப்பட்டது.
II. அந்நியச் செலாவணி ஒதுக்குகள் 225 கோடி அமெ. டொலர் என்ற உயர்ந்த மட்டத்தில் பேண முடிந்தது.
III. போக்குவரத்து, தொடர்பாடல், ஆடை ஏற்றுமதி, இறால் பண்ணைகள், தோல் கைத்தொழில்கள் என்பன துரித வளர்ச்சியை எட்டின.
IV. தனியார் மயமாக்கல் முழு அளவிலான சந்தை மட்டத்தில் அல்லாமல் ஓரளவிற்கு வெற்றியடைய முடிந்துள்ளது.

அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டம் தொடர்பாக வேறுபட்ட அனுபவத்தைக் கொண்ட ஒரு நாடாக இந்தியாவை நோக்க முடியும். முழுக்க முழுக்க உள்நோக்கிய அபிவிருத்திக் கொள்கையில் உறுதியாக இருந்த ஒரு சிறந்த உலக மாதிரியாக இருந்த இந்தியா 1980களின் நடுப் பகுதியிலிருந்து தற்சார்புப் பொருளாதாரம் ஒன்றைக் கட்டி எழுப்புதல் என்ற தனது நோக்கில் சரிவையும், பிரச்சினைகளையும் எதிர் கொள்ளத் தொடங்கியது. குறிப்பாக இறக்குமதிகளை ஈடு செய்யக்கூடிய விதத்தில் ஏற்றுமதியோ, அல்லது ஏற்றுமதி வருமானமோ இருக்கவில்லை. இது சென்மதி நிலுவை, வெளிநாட்டுச் சொத்துக்கள் என்பன தொடர்பான நிலைகளில் பாதகமான தன்மையினை உருவாக்க வழிவகுத்தது. மறுபுறத்தில் பொருளாதாரத்தை தாராளமயமாக்குவதற்கான சார்பு நிலையும் இந்தியாவில் இருக்கவில்லை. அந்நியக் கடன்களிலும், மானியங்களிலுமே அதிகளவில் தங்கியிருக்கும் நிலை உருவானது. பெரும்பாலான

நிதி நெருக்கடிகளை சமாளிப்பதற்காக இக்கால கட்டத்தில் இந்தியா சர்வதேச நாணய நிதியத்தை நாட வேண்டிய நிலை ஏற்பட்டது. சர்வதேச நாணய நிதியம் அப்போது இந்தியாவிற்கு கடன் வழங்குவதற்கான நிபந்தனையாக அமைப்பு சீராக்கல் முறைகள் உடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்தியது. இதனால் அமைப்பு சார் சீராக்கல் முறைகள் என்ற அடிப்படையில் பின்வரும் செய்முறைகளை இந்தியா செய்வதற்கு முனைந்தது.

- நிதிசார் சமமின்மைகளையும், வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறைகளையும் நிவர்த்தி செய்தல்.
- எல்லா நிறுவனங்களுக்கிடையேயும் போட்டி போடும் ஆற்றலை விருத்தி செய்தல்.
- பல்தேசியக் கம்பனிகளும், அந்நிய முதலீடுகளும் உட்பாயக்கூடிய விதத்தில் சந்தைக் கட்டுப்பாடுகளை நீக்குதல்.
- உலக பொருளாதாரங்களுடன் இந்தியப் பொருளாதாரத்தை ஒன்றிணைக்கும் வகையில் சந்தை நட்புக் கொள்கையினை அறிமுகப்படுத்தல்.

இவ் அனுபவங்களிலிருந்து அபிவிருத்தியடைந்து வரும் வெவ்வேறு குணாம்சங்களைக் கொண்ட பொருளாதாரங்களை உற்று நோக்கும் போது நீண்ட காலமாகவே இப்பொருளாதாரங்கள் சென்மதி நிலுவை நெருக்கடிகளுக்கும், அதன் தொடர்ச்சியான பற்றாக்குறைக்கும் முகம் கொடுத்து வந்துள்ளவையாகக் காணப்படுகின்றன. இதனால் இப்பொருளாதாரங்களை இவற்றிலிருந்து மீட்டெடுப்பதற்கு பொருத்தமான ஒரு கொள்கை ஏற்பாடாக அமைப்பு சார் சீராக்கல் கொள்கை கொண்டு வரப்பட்டது. இதனை உலக வங்கியின் சீராக்கல் கொள்கைக்கான நோக்கம் ஒன்று தெளிவுபடுத்தி நிற்கின்றது.

> "வளர்முக நாடுகளின் நடுத்தர காலச் செயற்றிட்டங்களுக்கும், அவை தொடர்ந்தேர்ச்சியாக எதிர்கொண்டு வரும் சென்மதி நிலுவைப் பிரச்சினைக்கும் அமைப்பு ரீதியான சீராக்கல் கடன் வழங்கல் ஊடாக உலக வங்கி உதவி செய்யும். இவ்வகையான செயற்றிட்டமல்லா நிகழ்ச்சிக் கடன்கள் வளர்முக நாடுகளின் வளங்களை உற்பத்தித் திறன் மிக்கவையாக மாற்றுவதுடன் பொருளாதாரத்தின் துரித வளர்ச்சிக்கும் வழிவகுப்பதாய் அமையும்."
> (உலக வங்கி ஆண்டறிக்கை - 1980)

அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கையும், இலங்கையும்

இலங்கையின் பொருளாதாரம் 1977கள் வரை பொதுவாக மூடப்பட்ட நிலையில் காணப்பட்டது. குறிப்பாக 1960-1970 களின் பிற்பகுதியில் அதன் கொள்கைகளும், அபிவிருத்தி உபாயங்களும் உள்நோக்கிய இயல்பினைக் கொண்டனவாகவே இருந்து வந்தன. 1957ல் இருந்து எதிர் கொள்ளப்பட்ட மிகக் கடுமையான சென்மதி நிலுவை நெருக்கடி பாரம்பரிய ஏற்றுமதிப் பொருட்களுக்கு இருந்து வந்த சாதகமற்ற உலக சந்தை விலை, அதிகரித்த இறக்குமதிகளுக்கான விலை போன்றன இத்தகைய சென்மதி நிலுவைப் போக்கை நிர்ணயித்த பிரதான காரணிகளாய் இருந்தன. ஆரம்பத்தில் இந்த நிலமையினை சாதகமாய்ப் பயன்படுத்தி வெளிநாட்டு ஒதுக்குகளைப் முகாமைப்படுத்த முடிந்த போதும் அத்தகைய ஒதுக்குகள் நீண்ட காலத்தில் பயனற்றதாக மாறியது. இதனால் பொருளாதாரம் ஒரு தேக்க நிலையை நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது. பெரும்பாலான துறைகள் வளர்ச்சிப் போக்கிற்கு எதிர் மறையான நிலையைக் காட்டியிருந்ததுடன் கடுமையான அந்நியச் செலாவணி நெருக்கடியும், உயர் மட்டத்திலான வேலையில்லாத் திண்டாட்டமும் அன்றைய பொருளாதாரத்தின் பிரதான குணாம்சங்களாக இருந்தன. இவற்றிலிருந்து மீழ்வதற்கு அரசு மிகவும் கடுமையான கட்டுப்பாடுகள் கொண்ட இறக்குமதிப் பதிலீட்டுக் கைத்தொழில் கொள்கை உத்தியை நடைமுறைப்படுத்தியது. இத்தகைய இறுக்கமான இறக்குமதிக் கட்டுப்பாடுகளானவை உள்நாட்டுப் பொருட்களுக்கு சந்தையில் போதுமான பாதுகாப்பை வழங்கியதுடன் உள்நாட்டு உற்பத்தியை பெருக்கத்தக்க வகையில் அரசும் ஊக்குவிப்பக்களை வழங்கியிருந்தது. இவ்வாறான ஒரு நிலமையிலேயே இறக்குமதி பதிலீட்டு கைத்தொழில் மயம்மாக்கல் கொள்கையின் கீழ் அரசுடமைக் கைத்தொழில் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டன. இவை இலங்கையில்

புதுவகையான ஒரு வர்த்தகப் பொருளாதார நடவடிக்கைகளை தோற்றுவித்த போதிலும் 1970களில் ஏற்பட்ட எதிர்பாராத சில நடவடிக்கைகளால் சில பின்னடைவுகள் ஏற்படத் தொடங்கியது. வெளிநாட்டு மூலதனப் பாய்ச்சலில் ஏற்பட்ட வீழ்ச்சி, இறக்குமதி செய்யக்கூடிய மூலப் பொருட்கள், இயந்திரங்கள் என்பவற்றிற்கு ஏற்பட்ட பற்றாக்குறை, ஆகியவற்றோடு 1973ல் ஏற்பட்ட முதலாவது சர்வதேச எண்ணெய் நெருக்கடி இத்தகைய நிலமைகளை மேலும் மோசமடையச் செய்தது.

இந்நிலைமைகளானவை இலங்கையின் பொருளாதாரத்தை தேக்க நிலைக்கு உட்படுத்தி இருந்ததுடன் பெரும்பாலான துறைகளின் வளர்ச்சி, ஓர் எதிர்மறையான நிலைக்கு உள்ளானது. கடுமையான அந்நியச் செலாவணி தட்டுப்பாடுகளும், மோசடைந்து வந்த சென்மதி நிலுவை நெருக்கடியும் உடனடியாக தீர்க்க வேண்டிய பொருளாதாரத்தின் பிரதான நோய்களாகக் காணப்பட்டன. இதனால் நாடு பொருளாதாரத் தாராளமயமாக்கல் கொள்கையை நடைமுறைப்படுத்தியதோடு மட்டுமல்லாமல் அதனை மீளமைப்புச் செய்யவேண்டிய (Restructuring) நிர்ப்பந்தத்திற்கும் ஆளாகியிருந்தது.

இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட உறுதிப்படுத்தலுக்கான சீராக்கல் கொள்கை (SSA) 1970 களின் பிற்பகுதியிலிருந்து இரண்டு கட்டங்களாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தது. இதில் முதற் கட்டம் 1977- 1988 வரையான ஒரு தசாப்த காலத்தையும் இரண்டாம் கட்டம் 1989 முதல் இன்று வரையான மற்றொரு தசாப்தத்தையும் உள்ளடக்கியிருந்தது. ஆரம்பக் கட்டமானது பாரம்பரியமாகப் பொருளாதாரம் கொண்டிருந்த குறைபாடுகளைக் களைவதற்கும், நாணய, நிதி ரீதியான சீராக்கங்களை மேற்கொள்வதற்கும், பொதுத் துறையின் செயற்பாடுகளை கணிசமான அளவிற்கு மட்டுப்படுத்துவதற்கும் வழிவிடுவதாய் அமைந்திருந்தது. குறிப்பாக நாணயமாற்று வீதத்தை தாராளமயப்படுத்தி ரூபாவினை ஏனைய சர்வதேச நாணயங்களுக்கு எதிராக முகாமைப்படுத்துவதனையும், செலாவணி விகிதங்களை சீரான அளவில் ஒருமுகப்படுத்துவதற்கும், பேரளவு அடிப்படையிலான பாதுகாப்பு விகிதங்களை அறிமுகப்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டது. இவற்றில் நிதிச் சந்தையை தாராளமயப்படுத்தும் பொருட்டு நாணயமாற்று வீதக் கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டமை பிரதானமான ஒன்றாகும். மேலும் வரவு செலவுத் திட்டத்தின் நடைமுறைச் செலவுகளில் குறைப்பைச் செய்யத்தக்க வகையில் பல நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. குறிப்பாக பொருளாதாரத்திலுள்ள பல்வேறு நிர்வாகக் கட்டுப்பாடுகளை கட்டுப்படுத்தல் அல்லது நீக்குதல். உதாரணமாக விலைக் கட்டுப்பாட்டை நீக்கியமை, கட்டுப்பாடற்ற சுதந்திர வர்த்தக வலயங்களை நிறுவியமை போன்றவை முக்கியமானவை. வரவு செலவுத் திட்டத்தில் பற்றாக்குறையில் குறைப்பை மேற்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளில் மற்றுமொன்று அரசாங்கம் வழங்குகின்ற பல்வேறுபட்ட மானியங்களையும், உதவு தொகைகளையும் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டமையாகும். முதலாம் கட்டச் சீர்திருத்தங்களில் வெளிநாட்டு முதலீடுகளை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறிப்பிட்டுக் கூறக்கூடியவையாகும். அத்தகைய முதலீடுகள் இலகுவாகப் பாயக்கூடியவாறும், உள்நாட்டு, வெளிநாட்டு முதலீட்டாளர்கள் முனைப்புடன் ஈடுபடக் கூடியவாறும் சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. உதாரணமாக பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழு (GCEC) நிறுவியமை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை முறை (EDB) கொண்டுவரப்பட்டமை, ஏற்றுமதி கிராமங்கள் உருவாக்கப்பட்டமை, வெளிநாட்டு முதலீட்டாளர்களைக் கவரக்கூடிய வகையில் ஊக்குவிப்புக்களும், சலுகைகளும் வழங்கப்பட்டிருந்தமை போன்றவற்றைக் கூறலாம்.

முதலாம் கட்டச் சீர்திருத்தமானது மேலும் அரசாங்க மூலதனச் செயற்பாடுகளில் அடிக்கட்டுமாண அபிவிருத்தியை திசை திருப்புவதற்கு வழிவகுத்தது. குறிப்பாக நீர்ப்பாசனம், காணி அபிவிருத்தி, வீடமைப்பு, கைத்தொழில்களுக்கான கட்டுமாணங்களின் விருத்தி ஆகியவற்றையும் உள்ளடக்கியிருந்தது. இந்த முதற் கட்ட அமைப்பு சார் சீர்திருத்தமானது 1980களின் ஆரம்பத்தில் சராசரிப் பொருளாதார வளர்ச்சி வீதம் 6.5 வீதத்திற்கு செல்ல வழிவகுத்தது. இத்தகைய ஒரு மாற்றத்திற்கு கட்டடவாக்கம், வர்த்தகம், நிதிச் சேவைகள் என்பன முக்கிய பங்காற்றியிருந்தன. எவ்வாறாயினும் முதற் கட்ட அமைப்புச் சீராக்கல் முனறகள் மூலம் எதிர்பார்த்த

இலக்குகள் இலகுவாக அடையப்படவில்லை. வேறொரு வகையில் கூறினால் பொருளாதாரத்தின் நிலைத்து நிற்கத்தக்க செயற்பாடுகள் பல தொடர முடியாதவாறு 1983இல் தீவிரமடைந்த இனநெருக்கடிகள் பெரும் தடையாய் அமைந்தன. இதனால் வர்த்தக வங்கி நடவடிக்கைகளில் பெரும் வீழ்ச்சியும், வெளிநாட்டு முதலீடுகள் தளர்வடைவதற்கான ஒரு சூழ்நிலையும் உருவாகியதுடன் முக்கியமாக இலங்கையின் உல்லாசப் பயணத்துறை மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டது. இதனால் சிவில் யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவரும் பொருட்டு அரசு புனர்வாழ்வு, புனர்நிர்மாண நடவடிக்கைகளுக்கு பெருமளவு பணத்தினை ஒதுக்கீடு செய்தது. இது 1987-1989க்கு இடைப்பட்ட காலப் பகுதியில் சராசரிப் பொருளாதார வளர்ச்சியை 2.9 வீதத்திற்கு கொண்டு வந்திருந்ததுடன் பல வகையிலும் பொருளாதாரம் தேய்வடைய காரணமாய் இருந்தது. குறிப்பாக 1977இல் 20 சதவீதமாக இருந்த இலங்கையின் திறந்த வேலையின்மையானது 1980 - 1982ல் 12 வீதம் என்ற குறைந்த அளவை அடைந்து மீண்டும் இனப்போர் பொருளாதாரத்தில் ஏற்படுத்திய தேக்க நிலையினால் 1985 - 1986இல் 14 வீதத்திற்கும், 1986 - 1987இல் 16 வீதத்திற்கும் உயர்வடைந்திருந்தது. இந்நடவடிக்கைகள் பொருளாதாரத்தில் ஒரு நிலையற்ற தன்மையை உருவாக்கியிருந்ததுடன் பொருளாதார செயற்பாடுகளிலும் உறுதிப்பாட்டைக் கொண்டுவரத் தவறியிருந்தன. பொருளியலாளர்களின் பார்வையில் இப்பின்னடைவிற்கு தாராளமயமாக்கல் முழுமையாக நடைமுறைப்படுத்தப்படாமையும், பொதுத் துறையினதும், பொதுத் துறைக் கூட்டுத்தாபனங்களினதும் செயற்றிறன் குன்றிய நிலமையும் உற்பத்தியிலும், செலாவணி நடைமுறைகளிலும் அரசின் தலையீடுகள் அதிகளவிற்கு இருந்தமையும் காரணங்களாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. குறிப்பாக தாரளமயமாக்கல் கொள்கையின் பல நடவடிக்கைகள் உள்நாட்டுக் கைத்தொழில்களை பாதுகாத்துக் கொள்வதற்கோ, சிறிய மற்றும் நடுத்தரக் கைத்தொழில்களை வளர்ச்சிப் பாதையில் முடுக்கிவிடும் விடயத்தில் வழிகாட்டுவதிலோ சரியான கொள்கைகளை பின்பற்றியிருக்கவில்லை. உண்மையில் சந்தைச் சக்திகளின் செயற்பாட்டிற்கு ஊடாக செயற்றிறனற்ற கைத்தொழில்களை செயற்றிறன் வாய்ந்தவையாக மாற்றுவதற்கு தாராளமயமாக்கம் வழிவிட்டிருக்க வேண்டும். ஆனால் அதற்கு மாறாக ஏற்கனவே திறம்பட இயங்கிவந்த சிறிய மற்றும் நடுத்தர உள்நாட்டுக் கைத்தொழில்கள் போட்டியைத் தாக்குப் பிடிக்கும் திறனைப் பெற்றுக் கொள்ள முடியாது போய்விட்டது. வேறொரு வகையில் கூறினால் சிறிய கைத்தொழில்கள் எதிர் கொண்ட நெருக்கடிகள் தாரளமயமாக்கலில் இருந்து அனுகூலங்களைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலையில் பாதிக்கப்படடிருந்தன.

இரண்டாம் கட்ட அமைப்பு சார் சீராக்கல் கொள்கைகளானவை இரண்டு நோக்கங்களை நிறைவேற்ற வேண்டியவையாய் இருந்தன.

1. முதலாம் கட்டத்தில் பொருளாதாரம் எதிர் நோக்கிய இடர்களையும், சமமின்மைகளையும் சீர் செய்ய வேண்டியிருந்தமை.

2. புதிய சீராக்கல் திட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டியிருந்தமை.

இதனால் இரண்டாம் கட்டச் சீராக்கங்கள் இரு வழிமுறைகளைப் பின்பற்றியிருந்தன.

1. வியாபார, வர்த்தக நடவடிக்கைகளின் ஊடாக பொருட்களின் உற்பத்திக்கு சாதகமான ஊக்குவிப்புக் கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கும் பொருட்டு மேலும் அதிகளவில் தாராளமயமாக்கலைச் செய்ய வேண்டியிருந்தமை.

2. தனியார் துறைப் பொருளாதார வளர்ச்சியின் உந்துவிசை என்ற அடிப்படையில் மூலதனச் சந்தையை உயிர்ப்பிப்பதற்கும், மேலும் வெளிநாட்டு நேரடி முதலீட்டினை ஊக்குவிப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டமை. அதாவது உறுதிப்படுத்தலுக்கான நிகழ்ச்சிகள் என்ற அடிப்படையில் இரண்டாம் கட்டச் சீர்திருத்தங்கள் தனியார் துறை மேலும் விருத்தி செய்ய முற்பட்டதுடன் வறுமையை ஒழிக்கும் திட்டங்களுக்கும் முன்னுரிமை கொடுத்திருந்தன. இதன் பொருட்டு இறுக்கமான நாணயக் கொள்கை கடைப்பிடிக்கப்படதுடன் சென்மதி நிலுவை நடைமுறைக் கணக்கில் குறைப்பை

ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளும், வரவு செலவுத் திட்டப் பற்றாக்குறையில் வீழ்ச்சியை ஏற்படுத்தலுக்கான செயற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டன. இதனடிப்படையில் இரண்டாம் கட்டத்தில் மூன்று பிரதான நடவடிக்கைகளுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

1. ஏற்றுமதி ஊக்குவிப்பு
2. தனியார் மயமாக்கல்
3. வறுமை ஒழிப்பைச் சீராக்கல்.

ஏற்றுமதி ஊக்குவிப்பு

இரண்டாம் கட்டச் சீராக்க நடவடிக்கைகளுள் மிகவும் விரிவான வகையில் கொள்கை மாற்றம் இடம் பெற்ற துறையாக இலங்கையின் ஏற்றுமதித் துறை காணப்படுகின்றது. ஏற்கனவே முதலாம் கட்டச் சீராக்கம் இடம் பெற்ற ஏற்றுமதி நோக்கிய கைத்தொழில் கொள்கை மேலும் விரிவாக்கப்பட்டு கடந்த ஒரு தசாப்த காலமாக தீவிரமான மாற்றங்கள் இடம் பெற்ற துறையாகக் காணப்படுகின்றது.

- முதலாம் கட்டத்தில் நடைமுறைப்படுத்தப்பட்ட முதலீட்டு ஊகுவிப்பு வலயத்திற்கு மேலதிகமாக (சுதந்திர வர்த்தக வலயம்), இரண்டாம் கட்டத்தில் மேலும் பல புதிய வலயங்கள் உருவாக்கப்பட்டன.

  உதாரணம்:- பியகம, கொக்கல, மீரிகம, பள்ளேகல

- கௌரவ பிரேமதாஸ அவர்கள் ஜனாதிபதியாக இருந்த காலத்தில் 200 ஆடைத் தயாரிப்புத் தொழிற்சாலைகளும், ஏற்றுமதிக் கிராமங்களும் மேலும் விரிவாக்கப்பட்டன.
- வெளிநாட்டு நேரடி முதலீட்டை மேலும் பன்மடங்கு கவருவதற்கும், அவற்றை இலங்கையின் வெவ்வேறு மாவட்டங்கள் நோக்கி நகர்த்துவதற்கும் விரிவான கொள்கை மாற்றங்கள் செய்யப்பட்டன.
- 1990இல் ஏற்றுமதித் தசாப்தக் கொள்கை அறிமுகப்படுத்தப்பட்டு அதனூடாக ஏற்றுமதியைத் துரிதப்படுத்தக்கூடிய பல வாய்ப்புக்களும், சந்தர்ப்பங்களும் வழங்கப்பட்டன.
- வெளிநாட்டு முதலீடுகளை மேலும் கவரும் நோக்கில் பாரிய கொழும்பு பொருளாதார ஆணைக்குழுவின் (GCEC) நடவடிக்கைகள் ஒருங்கிணைக்கப்பட்டும், விரிவாக்கப்பட்டும் முதலீட்டுச் சபை (BOI) உருவாக்கப்பட்டது.
- 1995க்குப் பின்னர் கைத்தொழில் பூங்காக்கள், விசேட கைத்தொழில் வலயங்கள், கைத்தொழில் பேட்டைகள் பிரதேச ரீதியாகப் புதிதாக உருவாக்கப்பட்டது.

தனியார் மயமாக்கல்

1985இல் படிப்படியாக ஆரம்பித்த தனியார் மயமாக்கல் முறை 2ம் கட்ட அமைப்பு சீராக்கல் கொள்கைகளின் பின்னர் முழு அளவில் பரவலாக்கம் செய்யப்பட்டு சீராக்கல் கொள்கையின் பல குறிக்கோள்களை நிறைவேற்றத்தக்க வகையில் பல நடவடிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப் பட்டுள்ளன. குறிப்பாக அரச நிறுவனங்களில் வினைத்திறன் நிறைந்த முகாமைத்துவத்தினைக் கொண்டு வருதல், நட்டத்தில் இயங்கும் அரசுடமை நிறுவனங்களை (SOEs) சீர்திருத்துவதன் முலம் அரசாங்கத்துக்கு ஏற்படக் கூடிய நிதிச்சுமையைக் குறைத்தல், அரசுடமை நிறுனனங்களை போட்டிச் சூழலுக்கு கொண்டு வருதல் மூலம் அவற்றின் உற்பத்தித்திறனை மேம்படுத்தல், தனியார் மயமாக்கப்படும் நிறுவனங்களில் வேலை செய்யும் ஊழியர்களையும் முழுமையான பங்குத்தாரர்களாக மாற்றுதல் போன்ற முக்கிய நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டன.

- 1990ன் தனியார் மயமாக்கல், மக்கள் மயமாக்கல் என்ற பெயரில் மாற்றப்பட்டு இலங்கைப் போக்குவரத்துச் சேவையின் 80 பிராந்தியப் பிரிவுகளின் பங்குகள் ஊழியர்களுக்கும், பொதுமக்களுக்கும் விற்கப்பட்டன.
- 1992 யூலையில் விவசாயத்துறைக்கு நகர்வடைந்த தனியார் மயமாக்கம் 449 பெருந்தோட்டங்களின் முகாமையை 22 உள்நாட்டுக் கம்பனிகளுக்கு இலாபம் உழைக்கும் நோக்கில் தனியார் மயப்படுத்தியது.
- 1993 இல் கைத்தொழில், சேவைத்துறை சார்ந்த 37 சிறிய, நடுத்தர நிறுவனங்கள் தனியார் மயமாக்கப்பட்டன.

- 1996 இல் தனியார் மயமாக்கல் நடவடிக்கைகளை தனித்துவமாகச் செய்யும் நோக்கத்தோடு பொது நிறுவனங்களின் சீர்திருத்த ஆணைக்குழு (PERC) அமைக்கப்பட்டது.
- வெளிநாட்டு நேரடி முதலீடுகளை தனியார் மயமாக்கலின் ஊடாக தீவிரமாகக் கவரும்பொருட்டு எயாலங்கா, ரெலிக்கொம், கேஸ் உற்பத்தி, உருக்குத்தொழில் என்பன தனியார் மயமாக்கப்பட்டன.

வறுமை ஒழிப்பு

மூன்றாம் மண்டல நாடுகளில் அமைப்பு ரீதியான சீராக்கலின் பிரதான கொள்கை ஏற்பாடுகளில் ஒன்று வறுமை ஒழிப்பு அல்லது வறுமை சீராக்கம் என்பதாகும். இந்த வகையில் 23 அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகள் சீராக்கல் கொள்கையின் ஊடாக வறுமையை ஒழித்து தலா வருமானத்தையும் பொருளாதார வளர்ச்சியையும் அதிகரித்துள்ளன. குறிப்பாக இந்தோனேசியா, சிலி, தாய்லாந்து, பிரேசில், கானா, செனகல், தன்சானியா ஆகிய ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளில் சீராக்கல் கொள்கையின் ஊடான வறுமை ஒழிப்பு பெரும் முன்னேற்றத்தைக் காட்டியுள்ளதுடன் இந்நாடுகளின் வருமானப் பகிர்வு 60 வீதத்திகனால் சீர் செய்யப்பட்டுள்ளதுடன் இந்நாடுகளின் பொருளாதார வளர்ச்சியில் குறிப்பிடத்தக்க உறுதி நிலையும் பிரதிபலிக் கப்பட்டுள்ளது.

இலங்கையில் 1930ம் ஆண்டுகளில் இருந்து வறுமை ஒழிப்புக்கான நடவடிக்கைகள் அரசாங்கக் கொள்கைகளில் பிரதான ஏற்பாடாக இருந்து வந்தது. சுதந்திரத்தின் பின்னர் இருந்து வேலைவாய்ப்பை வழங்குதல், வறுமையை ஒழித்தல், வருமானப் பகிர்வை சமப்படுத்தல், சமூக நீதியை நிலைநாட்டுதல் ஆகியன ஒன்றோடு ஒன்று இணைந்த வகையில் பல சமூக நலத் திடடங்கிளன் ஊடாக முன்னெடுத்துச் செல்லப்பட்டு வந்தன. ஆயினும் திறந்த பொருளாதாரக் கொள்கையின் பின்னர் வறுமை ஒழிப்புக்கான ஏற்பாடுகள் முழுமையான செயல் வடிவம் பெற்று நிறைவேற்றப்பட்டு வந்தன. எவ்வாயினும் 1989ம் ஆண்டு இரண்டாம் கட்ட அமைப்பு சார் சீராக்கல் கொள்கைகளே வறுமை ஒழிப்புக்கு தனித்துவமான பங்களிப்பை வழங்கியிருந்தன. குறிப்பாக கிராமப் புறங்களில் உள்ள மிகவும் வறியோர், வறியோரிலும் வறியோர் ஆகியோரைக் கருத்தில் கொண்ட வறுமை ஒழிப்பை நிலைத்து நிற்கக் கூடிய வகையில் செய்வதற்கான ஏற்பாடுகள் பல மேற்கொள்ளப்பட்டன.

- 1989இல் அப்போதைய ஜனாதிபதி பிரேமதாஸவினால் முன்வைக்கப்பட்ட வறுமை ஒழிப்புக்கான ஜனசவிய நிகழ்ச்சித் திட்டம் முன்னெடுத்துச் செல்லப்பட்டது. இத்திட்டம் உணவு உதவி, சேமிப்பு ஊக்குவிப்பு, சுய வேலைவாய்ப்பை அதிகரித்தல், வேலைவாய்ப்பிற்கான பயிற்சிகளை வழங்குதல் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டிருந்தது. இவ்வறுமை ஒழிப்பின் முதலாம் கட்டத்தில் (1989) 155.000 குடும்பங்களும், இரண்டாம் கட்டத்தில் புதிதாக 104.000 குடும்பங்களும், மூன்றாம் கட்டத்தில் (1992) மேலும் 106.882 குடும்பங்களும் வறுமை ஒழிப்பினால் நன்மையைப் பெற்றன.

- உணவுத் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டது. 1993 வரை இத்திட்டத்திற்காக 3.2 மில்லியன் ரூபா செலவிடப்பட்டுள்ளது.

- 1994ம் ஆண்டிலிருந்து வறுமை ஒழிப்பின் பிரதான செயற்றிட்டமாக சமூர்த்தி திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருவதுடன், வேலைவாய்ப்பை அதிகரிப்பதற்கும், மக்களிடையே நிதிசார் வேலைத் திட்டங்களை அறிமுகப்படுத்துவதற்கும் சமூர்த்தி வங்கி முறைகள் பிரதேச செயலாளர் மட்டங்களில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இன்று இலங்கையின் வறுமை ஒழிப்பின் சக்திமிக்க செயற்றிட்டமாக சமூர்த்தி திட்டம் விளங்குகின்றது.

முடிவுரை

அமைப்பு ரீதியான சீராக்கல் நிகழ்ச்சித் திட்டங்கள் மூன்றாம் மண்டல நாடுகளின் பொருளாதாரங்களில் சமநிலையான பேரண்டப் பொருளியல் சூழ்நிலை ஒன்றை உருவாக்கும் என்றும், மறுபுறத்தில் முதலீட்டுப் பாய்ச்சலுடன் கூடிய சீராக்கங்கள் மூலம் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கச் செய்து நிலைத்து நிற்கும் அபிவிருத்தியினூடாக அனைத்துப் பிரிவு மக்களுக்கும் சிறந்த வாழ்க்கை நிலமைகளையும், சனநாயகத்துடன் கூடிய பொருளாதார வாய்ப்புக்களையும், சமூக நீதியுடன் கூடிய பகிர்வினையும் ஏற்படுத்தும் என்ற நீண்ட எதிர்பார்ப்புடன் நிறைவேற்றப்பட்டது. இத்தகைய எதிர்பார்ப்புக்களின் பின்னால் உள்ள குறிக்கோள்கள் மெச்சத் தக்கவையாகும். ஆனால் மூன்றாம் மண்டல நாடுகளில் உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் சாதித்த சாதனைகள் சில சமயம் எதிர்பார்ப்புக்கு மாறாக இருந்ததுடன் அப்பொருளாதாரங்கட்கு அச்சுறுத்தலாக அமைந்து இருந்ததையும் எடுத்துக்காட்ட முடியும்.

திறந்த சந்தைப் பொருளாதாரங்களுக்கான எழுச்சி கண்டுவரும் மாதிரிகள எனப் போற்றப்படுகின்ற இலத்தீன் அமெரிக்க நாடுகளிலும், பல நெருக்கடிகளைச் சந்தித்து வந்த உபசகார ஆபிரிக்க நாடுகளிலும் மற்றும் தென்னாசிய நாடுகளிலும் அமைப்பு சார் சீராக்கங்கள் இடம்பெற்று வந்த காலகட்டம் முழுவதிலும் பல்வேறு சமூக, பொருளாதார, சுற்றுச்சூழல் தொடர்பான பிரச்சினைகள் தீர்க்கப்படாது இருந்ததுடன் இவை மேலும் புதிய வடிவம் பெற்று பல இடர்களை ஏற்படுத்தியும் வந்தன. மறுபுறத்தில் சீராக்கல் கொள்கைகள் வளர்ச்சியை அதிகரித்து வளர்முக நாடுகளில் பூதாகாரமாகத் திரண்டு வரும் கடன் சுமையைக் குறைத்து கட்டற்ற சந்தை ஒன்றை உருவாக்கும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் சீர்திருத்தங்கள் இடம்பெற்று ஒரு தசாப்தத்தை தாண்டிய நாடுகள் பலவற்றில்கூட இந்த இலக்குகள் இன்னும் சாதிக்கப்படாது உள்ளது.

மறுபுறத்தில் 1990களின் பின்னணியில் உறுதிப்படுத்தல் மற்றும் சீராக்கல் கொள்கைகள் விரிவான அடிப்படையில் பொருளாதார, அரசியல் உறுதிப்பாட்டை ஏற்படுத்தி சந்தை உறவு முறைகளை உலக மயமாக்கும் நிகழ்வுப் போக்கில் மூன்றாம் மண்டல நாடுகளை இணைக்கும் எனவும் எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் இம்முயற்சியானது வளர்முக நாடுகளுக்கு அவற்றின் சர்வதேச வர்த்தக உறவுகளில் மேலதிக அனுகூலம் எதனையும் வழங்கவில்லை. மாறாக வளர்முக நாடுகளின் சீராக்கல் திட்டங்கள் வடபுலத்தின் கைத்தொழில் நாடுகள் பிரமாண்டமான நன்மையைப் பெறவே உதவியுள்ளன.

வளர்முக நாடுகளில் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்ட சீராக்கல் கொள்கைகள் இந்நாடுகளின் வறிய சமூகப் பிரிவினருக்கு அதிகளவிற்கு அனுகூலங்கள் எதனையும் எடுத்து வரவில்லை. கடந்த மூன்று தசாப்த காலத்தில் உலகளாவிய ஏற்றத் தாழ்வுகள் மூன்று மடங்கிற்கு மேலாகப் பெருகியுள்ளது. இவ்வாறான ஒரு சூழ்நிலையில் வறியோர் மேலும் மோசமான வறுமைக்கு உட்படுத்தப்பட்டுள்ளமையை உலகப் புள்ளிவிபரங்கள் சான்று பகர்கின்றன. இதற்குக் காரணம் சீராக்கல் கொள்கைகள் வளர்முக நாடுகளில் வாழ்ந்து வரும் வறிய சமூகப் பிரிவினர் தொடர்பாக நடைமுறைப்படுத்தப்பட்ட கொள்கைகள் செயற்றிறன் வாய்ந்தவையாக இருக்கவில்லை அல்லது பாரபட்சம் காட்டப்பட்டுள்ளது என்பதே பொருளியலாளர்களின் வாதமாகும்.

இலங்கையைப் பொறுத்த வரையில் அமைப்பு சார் சீராக்கல் கொள்கைகள் கடந்த இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பல கொள்கைச் சீர்திருத்தங்களின் ஊடாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தபோதிலும் இலங்கையின் அகப், புறச் சூழலும் பல சவால்களும் முழுமையான சீராக்கலின் விளைவுகளை நாடும், பொருளாதாரமும் உள்வாங்க முடியாதவாறு தடைக்கற்களாக நின்றன. எவ்வாறாயினும் வளர்முக நாடுகளின் பாதகமான தாக்கங்களைப் போன்றே இலங்கையிலும் சீராக்கல் கொள்கைகள் தான் கடந்து வந்த பாதையில் பல பாதகங்களையும் விதைத்து வந்துள்ளது. உண்மையில் முழுமையான சீராக்கலின் அடிமட்ட விளைவுகள் செயற்றிறன் வாய்ந்த வகையில் இலங்கை உட்பட்ட வளர்முக நாடுகளில் பரவ வேண்டுமாயின் இந்நாடுகளின் உள்ளார்ந்த

பொருளாதார, அரசியல், சமூகச் சூழல் முற்றாக மாற்றப்பட வேண்டும். அதேபோன்று இக்கொள்கைகளை வழிநடத்தும் சர்வதேச நிறுவனங்களும், அவை சார்ந்த நாடுகளும் வளர்முக நாடுகளின் உண்மையானதும், வெளிப்படையானதுமான பிரச்சினைகளை உணர்ந்து அவற்றைத் தீர்க்கும் வகையில் அக்கறை மிக்கதான மனதுடன் ஈடுபட வேண்டியது பிரதானமானதும், அவசியமான தேவையும் ஆகும்.

REFERENCES

1. Abeyasekera .C. and Bastian .S. 1993, **Structural Adjustment Policies in Sri Lanka ; A Critical Evaluation**- NGO . WB- Committee.
2. Bhattacharya .B 1993, **" Structural Adjustments in Trade Policy: A Theoretical Perspeetive of Liberalization in the Changing International Scenario"** Structural Adjustment in the Indian Economy – 1
3. Chowdhury .A, Islam .I, 1993, **"The Newly Industrialising Economies of East Asia."**
4. Gerster. 1991, **" Basic Development Questions on Structural Adjustment as it People Mattered"** New World Series – 12
5. Jayarajah .C, 1998, **" World Bank Structural Adjustment Operations ,1980-1993: An Evaluation"**, Upanathi. Vol-8
6. Kamalakumari .K , 1995, **" The International Monetary Fund (IMF) Adjustment Policies and Economic Development"** Mentor – 1995- Vol-1
7. Laxman .W.D., 1999(Edit), **Dilemas of Development**
8. Reusse .E, 2001 **" What was Wrong with Structural Adjustment?"** Development and Co-Operation- Jan-Feb-2001.
9. Sinnathamby .M. , 1999, **"International Financial Institutions Initiatives in Social Development: The Sri Lankan Experience in the Post- 1977 Period"** ICFTU- APRO.
10. மக்கள் வங்கி, 1995, "அமைப்பு ரீதியான சீராக்கம" பொருளியல் நோக்கு - 1995 - Jan-Feb
11. அம்பிகாதேவி .சி., 1992, "உலக வங்கியின் அமைப்பு ரீதியான சீராக்கல் கொள்கை" மார்க்கம் - 1992

கிழக்குப் பல்கலைக்கழக நூலக வாரத்தை முன்னிட்டு வெளிவரும் சிறப்புக் கட்டுரை.

திருமதி. தவமணிதேவி அருள்நந்தி
B.A. (Hons), M.L.I.S.(Bangalore)
பதில் நூலகர்/தலைவர் நூலகம்
கிழக்குப் பல்கலைக்கழகம்

நூல்கர் ஒரு நூலக முகாமையாளர் (Librarian is a Manager of the Library)

'நூலகர் ஒரு நூலக முகாமையாளர்' என்பதை நோக்க முன் நூலகம் பற்றிய சில அடிப்படை உண்மைகளை(Fundamental Truth) அறிதல் பொருத்தமுடையது. நூலகம் (Library) என்னும் சொல்லுக்கு இலத்தீன், பிரெஞ்சு, ஜேர்மன், ஆங்கிலம் முதலிய மொழிகளில் பல்வேறு கருத்துக்கள் கூறப்பட்டாலும் இலத்தீன் மொழியில் கூறப்பட்ட கருத்து ஏற்றுக் கொள்ளக்கூடியதாக உள்ளது. இலத்தீன் மொழியிலிருந்து பெறப்பட்ட 'Liber' எனும் சொல் புதகம் என்னும் கருத்தைக் கொடுக்கின்றது. ஆகவே இப்புத்தகங்கள் அல்லது நூல்களும் ஏனைய ஆவணங்களும் பாதுகாக்கப்பட்ட இடம் நூலகம் என்றழைக்கப்பட்டது. இந்நூலகப் பாவனையும் ஒரு சிலருக்கே கிடைத்தது. அதாவது கட்டுப்பாடான(Closed access)அணுகுமுறையாகவே காணப்பட்டது.

உலகில் ஏற்பட்ட கடதாசி கண்டுபிடிப்பு, அச்சு இயந்திரப் பாவனை, அதனால் ஏற்பட்ட நூல்களின் பெருக்கம், மக்கள் மத்தியில் எதையும் அறிய வேண்டும் என்ற ஆவல் போன்றன பல நூலகங்கள் உருவாவதற்குக் காரணமாகின. இந்நூலகங்களில் ஆவணங்கள் (Documents), பாவனையாளர் (User/Reader), உத்தியோகத்தர் (Staff) எனும் மூன்று விடயங்கள் முக்கியத்துவம் பெறத் தொடங்கின.

எதையும் அறிய வேண்டும் என்ற ஆவலானது நூல்கள் பாவனைக்கே (Books are for use) என்ற பரிணாமம் வளர்ச்சி பெறத் தொடங்கியது. இதனால் நூலகத்தையோ நூலகம் கொண்டுள்ள தகவல்களைப் பாவிக்கவேண்டும் என்ற உந்தலானது திறந்த பாவனை (Open access) முறைக்கு வழி ஏற்பட்டது. ஆகவே இதுவரை காலமும் நூல்களின் பாதுகாவலராக இருந்த நூலகரும் தன் நிலையை மாற்றி இலகுவில் தகவல்களைக் கொடுத்துதவும் சேவை மனப்பாங்கு உடையவராக மாறினார்.

நூலக ஆவணங்கள், பாவனையாளர்கள், உத்தியோகத்தர் கணிசமானளவு அதிகரித்தபோது அவற்றை நிர்வகித்து ஒழுங்குபடுத்துவதற்குத் திறமையான நிர்வாகம் தேவைப்பட்டது. எந்த ஒரு நிறுவனமும் அதன் உற்பத்தி அல்லது மூல ஸ்தாபனத்தின் (Parent body) கொள்கைகளை நிறைவேற்றக் கூடியதாக இருக்க வேண்டும். உதாரணமாக ஒரு பல்கலைக்கழக நூலகமானது அப்பல்கலைக்கழக நிர்வாகத்தின் கொள்கைகளை தன் வேலைத் திட்டங்கள் மூலம் நிறைவேற்ற வேண்டியது அவசியம். ஓர் உயர் கல்வி நிறுவனம் கல்வியைப் பல நிலைகளில் போதித்து வளர்ச்சியடைவதை நோக்கமாகக் கொண்டிருக்கும்போது அந்நோக்கை நிறைவேற்றும் ஸ்தாபனமாக (Organization) நூலகம் இருத்தல் அவசியம். ஆகவே இங்கு நூலக நிர்வாகம் (Library Administration), நூலகம் ஒரு ஸ்தாபனம் (Organization) போன்றன நூலக வளர்ச்சியில் முக்கிய இடம் பெறத் தொடங்கின. இவ்வகையில்தான் நூலகத்தைத் திறம்பட நடாத்துவதற்குத் திட்டமிடப்பட்ட நூலக முகாமைத்துவம் (Library Management) அவசியம் என்ற நிலையும் ஏற்பட்டது.

நூலக முகாமைத்துவம் (Library Management)

பொதுவாக முகாமைத்துவம் மனிதனின் கலாச்சார மலர்ச்சியுடன் ஆரம்பித்தாலும் முறையான ஒரு முகாமைத்துவம் பற்றிய அறிவை 20ம் நூற்றாண்டிலேயே காணக்கூடியதாக உள்ளது. இந்நிலைப்பாட்டிற்கு நூலகமும் விதிவிலக்கல்ல. நூலகத்தை நாம் ஒரு நிறுவனம் என்று கூறும்போது அந்நிறுவனத்தின் நிர்வாக ஒழுங்கமைப்புக்கு முகாமைத்துவம் ஒரு கருவியாக(Tool) உள்ளது. இங்கு நிர்வாகம் என்பது பரந்துபட்ட அர்த்தத்தைக் குறிக்கின்றது. ஒரு வியாபார ஸ்தாபனத்தில் (Company) ஒரு முகாமையாளர் அத்தாபனத்தின் ஆணைகளை/கட்டளைகளை நிறைவேற்றும் ஒரு அதிகாரியாகக் காணப்படுகின்றார். இத்தாபனம்

இலாப நோக்கை அடிநாதமாகக் கொண்டது. ஆனால் எந்த ஒரு நூலகரும் பொது நூலகம்/தேசியநூலகம்/கல்விநூலகம்/சிறப்புநூலகம் (Public/National/Education/Special) அவ்வவ் நிறுவனத்தின் நோக்கங்களை நிறைவேற்றும் முகாமையாளராக இருக்கின்றார். இங்கு நூலகம் ஒரு இலாப நோக்கமற்ற சேவையை அடிப்படையாகக் கொண்ட நிறுவனமாக உள்ளது.

நூலக நோக்கமும் அடிப்படைத் (Aim & Basic Concept)

எந்த ஒரு நூலகத்தின் நோக்கமும் 'அறிவைப் பரப்புதல்' (Dissermination of Knowledge) என்பதில் வேறுபாடுடையன அல்ல. நூலகமும் மற்றைய நிறுவனங்களைப் போல முக்கியமான அடிப்படைத் தத்துவங்களைக் கொண்டது. அத்தத்துவங்கள் நூலகத்தின் நோக்கை மையமாகக் கொண்டே இருக்கும். இன்றைய வளர்ச்சியடைந்த நூலகம் அல்லது தகவல் நிலையம் (Information Centre) அல்லது ஆவணங்களின் நிலையம் (Documentation Centre) ஒரு தகவலைப் பெற அல்லது அறிய அந்நிலையத்தை அணுகிய வாசகருக்கு எவ்வாறு அத்தகவலை அளித்தார் என்பதில்தான் அந்நிறுவனத்தின் வெற்றியே தங்கியுள்ளது. ஒரு வேண்டப்பட்ட தகவல் வேண்டப்பட்ட வாசகருக்கு வேண்டப்பட்ட நேரத்தில் வேண்டப்பட்ட உருவத்தில் (The right information should reach the right person at the right time in a right fomat) கொடுப்பதே இன்றைய நூலகத்தின் தத்துவமாகும்.

மேற்குறிப்பிட்ட நோக்கு, தத்துவத்தை நிறைவேற்ற வேண்டுமானால் நூலகம் ஒரு ஒழுங்கு செய்யப்பட்ட முறையில் அமைதல் அவசியம். கோள்வனவு செய்யப்பட்ட ஆவணங்கள் வாசகர் பாவனைக்கு வாசகர் சேவைக்கு(Reference Service) அனுப்புதல் முறைப்படி இரவல் கொடுத்தல் (Lending), பராமரித்தல் (Maintanance) எனப் பலதரப்பட்ட ஒழுங்குகள் உள. அத்துடன் இவற்றின் பாவனை எவ்வளவு நிச்சயமானதோ அந்தளவிற்கு அவற்றின் பாதுகாப்பும் (Security) உறுதிப்படுத்தலும் அவசியம். காரணம் இவ் ஆவணங்கள் காலம் காலமாகப் பாவிக்க வேண்டிய அரிய சொத்துக்களாகும். இவற்றை ஒரு திறமையான சுயலாபமற்ற நூலக முகாமையாளராலேயே பாதுகாக்க முடியும். அதனால்தான் நூலகர் ஒரு நூலக முகாமையாளர் என்ற புதுக் கொள்கையை நூலக விஞ்ஞான உலகம் உருவாக்கியுள்ளது. இதைத் தொடர்ந்து நூலக விஞ்ஞானம், தகவல் விஞ்ஞானம் என்றும், நூலகம் தகவல் நிலையம் என்ற மாற்றுப் பதங்களும் பாவனையில் இடம் பெறத் தொடங்கின.

நூலகம் வாசகர்களின் அறிவை வளர்ப்பதால் அது ஓர் ஊடகமாகவும் செயற்படுகின்றது. சேவையை மையமாகக் கொண்டுள்ளதால் அது ஒரு செலவு செய்யும் நிலையமாகவும் (Spending Institution) உள்ளது. இத்தகைய நோக்கமும், சேவையும் கொண்ட ஒரு நூலகத்திற்கு ஒரு முகாமைத்துவம் தேவை அல்லது நூலகம் ஒரு முகாமைத்தன்மை உடையது என்று கூறலாம். அரசாங்க நிதி அல்லது வேறு ஒரு நிதியை வாசகர் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக செலவிடும்போது அவற்றை வாசகர் பாவனைக்கு அளித்துப் பாதுகாத்தல் அவசியம். ஆகவே அரசாங்கம் பொது மக்களுக்காகச் செலவு செய்வதால் அவற்றைப் பாதுகாத்தல் எமது கடமையாகும். தகவல்களை மீளப் பெறுதலுக்கும(Retrieval) இப்பாதுகாப்பே உதவி செய்கிறது.

ஐந்து நூலக விஞ்ஞான சட்டங்கள் [Five Laws of Library Science]

இந்திய நூலக விஞ்ஞானத் தந்தை எனச் சிறப்பித்துக் கூறப்படும் Dr. S.R. ரங்கநாதன் 1928ல் ஐந்து நூலக விதிகளைக் கூறிச் சென்றுள்ளார்.
அவையாவன,

1. நூல்கள் பாவனைக்குரியன (Books are for use)
2. ஒவ்வொரு வாசகரும் ஒரு நூலை யுடையவர் (Every reader his or her book)
3. ஒவ்வொரு நூலும் ஒருவாசகரைக் கொண்டது (Every book has its Reader)
4. வாசகரது நேரத்தைப் பேண் (Save the time of the reader)
5. நூலகம் ஒரு வளரும் ஸ்தாபனம் (Library is a growing organization)

இவ்வைந்து நூலகவிதிகள், ஒவ்வொன்றும் தத்தமக்குள் நிறைந்த பரந்த ஆர்வத்தைக் கொண்டுள்ளன. இவற்றின் கூடிய விளக்கங்களை நூலக முகாமைத்துவத்தின் ஒவ்வொரு கூறுகளிலும் இடம் பெறுவதைக் கீழே காணலாம்.

முகாமைத்துவம் பற்றி பலர் பலவாறு விளக்கம் கூறியுள்ளபோதும் Grulick, Uriwick என்போர்கள் POSDCORB என்னும் எழுத்துக்களின் விரிவான விளக்கத்தில் முகாமைத்துவத்தின் விளக்கத்தைக் கூறியுள்ளனர். திட்டமிடல் (planning) ஒழுங்குபடுத்தல் (Organization) உத்தியோகத்தர் (Staffing) நெறிப்படுத்தல் (Directing) ஒன்றுசேர்த்தல் (Co-ordinating), அறிக்கை தயாரித்தல் (Reporting), வரவு செலவுத் திட்டம் தயாரித்தல்(Budgeting) என்பன இச்சொற் கூட்டத்தின் விளக்கமாக உள்ளன.

1. திட்டமிடல் (Planning)

எந்த ஒரு அமைப்பும் தன் நோக்கையும் இலட்சியத்தினையும் நிறைவேற்றுவதற்குத் திட்டமிட்ட செயறிட்டங்களை அமைத்தல் முக்கியமானது முகாமைத்துவத்தின் முழு வெற்றியும் இத் திட்டமிடலில் தங்கியுள்ளது எனலாம். எந்த வொரு நூலகமும் இலாப நோக்கத்தை அடிப்படையாகய் கொண்டதல்ல. பொதுமக்களின் பல்கலைக்கழகமாக இருப்பது நூலகம் ஒன்றே. அதன் முதலீட்டாளர் அரசசாங்கமும் அரசசார்பற்ற நிறுவனங்களுமாகும். ஆகவே இம் முதலீட்டாளர்களின் சொத்தைப் பாவித்து பாதுகாத்து வருங்காலத்தவருக்கும் உதவுமுகமாக ஆவணப்படுத்தலும் திட்டமிடலின் முக்கிய கூறாகும்.

நூலகத்தின் முக்கிய கூறுகளான நூல்கள், வாசகர்கள், உத்தியோகத்தர்கள் என்பன அதிகரிக்கும் தன்மையுடையன. அதற்கேற்ப முக்கியமாக நூலகக் கட்டிடம் அமைக்கத் திட்டமிடப்படல் வேண்டும். குறுகிய நிலப்பரப்பில் அழகாக நூலகக் கட்டிடம் அமைக்கத் திட்டமிடும் போது எதிர் கால விரிவாக்கம், வேலை செய்யும் உத்தியோகத்தருக்குப் பொருத்தமான வேலைத்தளத்தை உருவாக்குதல், இயற்கையான வெளிச்சம், காற்றோட்டம், சிக்கலற்ற கட்டடக் கலை, சத்தம் உள்வாங்கக் கூடியதாக இருத்தல், நூலக வெளிப்புற அமைப்பை விட நூலக உள்ளமைப்பிற்கு திட்டமிடல் போன்ற பல விடயங்களை மனதில் கொள்ளல் அவசியம். கட்டடக் குழுவின் முக்கிய உறுப்பினர்களாக கட்டடக் கலைஞர், நூலகர், நூலக ஆலோசகர், நிர்வாக உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர் என்போர் அடங்குவர். இவர்களுள் நூலகரும், கட்டடக் கலைஞரும் கட்டடம் பற்றிய நல்லறிவும், திட்டமிடலும் அறிந்திருத்தல் அவசியம்.

1. ஒழுங்கமைப்பு (Organization)

திட்டமிடப்பட்ட விடயங்களை நிறைவாக நிறைவேற்றப்படுவதற்குத் திட்டமிடப்பட்ட ஒழுங்கமைப்பு அவசியம். அதன் மூலம்தான் ஸ்தாபனத்தின் நோக்கை நிறைவேற்றலாம். உதாரணமாக ஒரு நூலகத்தில் கொள்வனவு செய்யப்படும் நூல்கள் வாசகர் பாவனைக்கு வரும்வரை இடையில் நூற்சேர்க்கை,(Acqusition) நூற்பட்டியலாக்கம், (Cataloguing) வகுப்பாக்கம், (Classification) வாசகர் உசாத்துணைப் பகுதி, (Reference service) வளங்களைப் பாவித்தல் (Resource sharing) எனப் பல்வேறு பிரிவுகளுக்கிடையில் வேலைகள் ஒழுங்குபடுத்தப்படல் அவசியம். யாவும் ஒழுங்குபடுத்தப்பட்டிருக்கும்போது தகவல்களைப் பெறுதல் இலகுவானதே. வாசகரது நேரத்தைப் பேணுதல் முக்கியமானது.

2. ஊழியரிடல் (Staffing)

ஒரு நிறுவனத்தின் வெற்றி அந்நிறுவனத்தின் உத்தியோகத்தரின் நியமனம் பின் அவ் உத்தியோகத்தரின் உண்மையான உழைப் பிலேயே தங்கியுள்ளது. இது எந்த நூலகத்தையும் பொறுத்தளவில் முக்கியமானது. காரணம் நூலகம் சேவையை மையமாகக் கொண்டது. இச் சேவையைக் கொடுக்க நூலகத்தின் கீழ் மட்டத்திலிருந்து மேல் மட்டம்வரை ஆயத்தமாக இருத்தல் வேண்டும். பொது நூலகம் பொது மக்களின் கல்வி நிறுவனத்திற்கு ஒப்பானதாக இருத்தல் அவசியம்.

ஒரு பல்கலைக்கழக நிறுவனத்திலுள்ள நூலகரும் அவரது உத்தியோகத்தரும் பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர்கள், ஆசிரியர்கள், பாவனையாளர்களுக்கு வேண்டிய தகவல்களை உரிய நேரத்தில் உரிய வாசகருக்கு உரிய உருவ அமைப்பில் கொடுக்கக்

கூடியவர்களாக இருத்தல் வேண்டும். உதாரணமாக கடையில் உழுந்து கேட்டுப் போன பாவனையாளரிடம் கடையுரிமையாளர் உழுந்தில்லை ஆனால் பயறு வேண்டுமா என்கிறார். இங்கு வியாபாரி தனது வியாபார நிலையை உயர்த்த முயற்சிப்பதனைக் காணலாம். அவ்வாறே தகவல் ஒன்றை நாடி அல்லது ஒரு நூலை நாடிச் சென்ற வாசகருக்கு அதைக்கொடுக்க முடியாத நூலக உத்தியோகத்தர் அக் குறிப்பிட்ட வாசகரை அவர் கேட்ட தகவலைச் சார்ந்த அல்லது வேறு நூலைப் பெற உதவி செய்தல் மிக மிகத் தேவையான சேவையாகும். அப்போதே மேலும் மேலும் வாசகர்கள் நூலகத்தை மேலும் நாடிவருவர். நூலகநோக்கமும் நிறைவேறும்.

இதுவே இலாப நோக்கற்ற உத்தியோகத்தரின் சேவையாக இருக்க வேண்டும். இது தம் நிறுவனத்தின் நோக்கை நிறைவேற்ற நோக்கமுள்ள உத்தியோகத்தரின் சேவையாகும். இவற்றை மேலும் திறம்பட நிறைவேற்றுவதற்கு நூலக முகாமையாளரின் நெறிப்படுத்தல் (Directing)அவசியமாகும்.

ஒரு நிறுவனத்தின் வெற்றி அவ் நிறுவனத்தைநெறிப்படுத்திச் செல்லும் தலைவரில் தங்கியுள்ளது. தனது உத்தியோகத்தரின் திறமையை ஊக்கப்படுத்தியும் தன் சௌகரியங்களைத் தியாகம் செய்து கடமை செய்பவராக இருந்தால்மட்டுமே அத்தலைவரைப் பின்பற்றி தம் திறமைகளை வெளிக் கொணர்வர். இது அவர்கள் தம்மைமுன்னேற்றுவதுடன் நிறுவனத்தின் வெற்றிக்கும் வழிகோலும்.

3. ஒன்று சேர்த்தல் (Co-ordinating)

நூலக விஞ்ஞானத்தில் கூட்டுறவு என்பது பரந்தளவில் கடைப் பிடிக்கப்படுவதொன்று நூலகத்தின் நிர்வாகப் பகுதியில் பல பிரிவுகள் நூற்சேர்க்கைத் துறை(Acquisition Department) பட்டியலாக்கம்(Cataloguing)பகுதியாக்கம்(Classification) வாசகர்பகுதி ,(Reference service) பருவஇதழ் பகுதி(Periodical section) என உள்ளன. இப்பகுதிகள் யாவும் ஒன்றுடனொன்று தொடர்புடையன. இவற்றுக்கிடையே சாதாரணகணணிமயத் தொடர்புகளுடன் மனிதஇதயத் தொடர்பினை(Human Network) ஏற்படுத்தல் அவசியம். மனித தொடர்பானது பரஸ்பரம் விட்டுக் கொடுத்தும் வேலைவிடயங்களைக் கலந்து ரையாடியும் செய்தால் பாரம் தெரியாது. சோம்பல் வளராது. தத்தம் கடமைகளைச் செய்ய வாய்ப்பாகவும இருக்கும். இன்னும் சில உத்தி யோகத்தர்களுக்கிடையே பகிர்ந்தளிக்கப்பட்ட கடமைகளில் ஒரு எல்லைக்கு மீறி ஈடுபடுதலைத் தவிர்த்தலும் ஒரு தலைவருக்கிருக்க வேண்டிய சிறப்பம்சமாகும். நிறைவினைப் பாராட்டி குறைகளைத் தவிர்க்கவைத்து வழிநடத்திச் செல்ல வேண்டியது ஒரு பொறுப்பு வாய்ந்த தலைவரின் கடமையாகும். இவ் உத்தியோகத்தர்கள் என்னுடன் உத்தியோகம் செய்பவர்கள் (Staff are working with me not under me) என்று கூறும் சூழ்நிலையை உருவாக்க வேண்டும்.

அடுத்து அறிக்கை தயாரித்தல்(Reporting) வரவுசெலவுத் திட்டம் தயாரித்தல(Budgeting) என்பனவும் ஒரு நூலகர் செய்ய வேண்டிய கடமையாகும். வருமானம் கொடுக்கும் ஒரு நிறுவனம் இவ் விரண்டிலும் எவ்வாறு கவனம் செலுத்துகின்றதோ அதே போன்று நூலகம் இவ்விரண்டிலும் கவனம் செலுத்தி வருகின்றது. நூலகம் ஒரு வளரும் ஸ்தாபனம். ஆகவே அதன் பாவனையாளர்கள், உத்தியோகத்தர்கள், வளர்ந்து கொண்டே போகின்றன. இவற்றைப் பாவிக்கவும், பராமரிக்கவும் பணம் முக்கியம். இதை ஒழுங்காகப் பெறுவதற்கும் திட்டமிட்ட நிதியொதுக்கீடு தேவை. அந் நிதியைப் பெறுவதற்கும் புதியவற்றை கொள்வனவு செய்வதற்கும் நூலகர் தனது நூலகத்திற்குத் தேவையான நிதியைப் பெறுவர்.

இன்று நூல்கள் பருவ வெளியீடுகள், தளபாடப் பொருட்கள், கட்டிட உபகரணங்கள், தொழிநுட்ப உபகரணங்கள் என்பவற்றின் விலைகள் மிக உயர்ந்துள்ளன. இவற்றை மனதில் வைத்தே ஒரு திறமான நூலகர் தமது வரவு செலவுத்திட்டத்தைத் தயாரித்தல் வேண்டும். இவற்றின் விலைஉயர்வு ஏற்கனவே இருப்பவற்றின் பராமரிப்புச் செலவு என்பவற்றையும் கருத்தில் கொள்ளல் அவசியம்.

தகவல் தொழில்நுட்பமும் நூலகங்களும் (Libraries & Information Technology)

இன்று நாம் வாழும் தகவல் உலகத்தின் தாக்கம் நூலகவிஞ்ஞானத்திலும் குறிப்பிடத்தக்க மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது. நூலகங்களைக் கணணிப்படுத்தும் முயற்சி 1980இல் ஏற்பட்டது. நூலகத்தின் முழுநடவடிக்கைகளையும் கவனித்துக் கட்டுப்படுத்தவும் நூலகசேகரிப்புக்களைக் கூட்டவும் நடைமுறையிலுள்ள சேவையை உயர்த்தவும், எதிர் கால மேலதிக சேவைக்குத் திட்டமிடவும் பலதரப்பட்ட நூலகங்களின் வளங்களை தேசிய, உள்ளூர் நிலையங்களில் பாவிக்கவும், இக் கணணிமயப்படுத்தப்படும் முறை முக்கியமானது. இது மேலும் நூலக சேவையிலுள்ள வேலைகளுக்கும் (Technical, processing and circulation work),தகவல்களைப் பாதுகாத்து மீண்டும் அதே தகவல்களைப் பெற்றுப் பாவிப்பதற்கும் (Retrival& dissemination) நூலகரது முகாமைத்துவத் தகவல் சேவைகளுக்கும்(Management Information Services) உதவியாக உள்ளது. நூல்கள் பாவிப்பதற்கே என்பது போல ஆவணங்கள் தவிர்ந்த ஏனைய தகவல்களும் பாவிப்பதற்கேயுரியன. தகவல் வளங்கள்(Information Resources) பாவிக்கப் பாவிக்க குறைபடாத செல்வத்தை யுடையன. ஆகவே வளர்ச்சியடைந்த தொழிநுட்ப வசதிகளையும், தகவல் வளங்களையும் நூலக முகாமையாளர் தன் வாடிக்கையாளர்களுக்கப் பெற்றுக் கொடுக்க வேண்டியதவசியம். எவ்வாறு ஒரு நிறுவன முகாமையாளர் புதிய கண்டுபிடிப்புக்களை தன் நிறுவனத்திற்கு உடனே அறிமுகம் செய்வது போல நூலக முகாமையாளர்களும் விரைவில் தம் நிறுவனத்தின் பாவனைக்கும் ஒழுங்கு செய்தல் அவசியம். அப்போதே பல வாசகர்கள் நூலகத்தை நாடி வருவார்கள். காரணம் இளைய சமுதாயம் துடிப்பானது எதையும் அறிய வேண்டும் என்ற அறிவுப் பசி கொண்டது.இத்தகைய தேவைகளை ஒரு நூலகர் நிறைவேற்ற வேண்டுமானால் அவர் முகாமைத்துவ நுட்பங்களை அறிந்து பெற்று அவற்றை வாசகர்களுக்குப் பயனுறச் செய்வதே இன்றைய நூலகரின் தலையாயகடமையாகும்.

இவற்றை நடைமுறைப்படுத்தப்படும் போது பல்வேறு வகையான தடைகள் (Short coming & barriers) வருவது தவிர்க்க முடியாது. இவற்றையும் சந்தித்துத் தன் ஸ்தாபன வளர்ச்சியை முன்னெடுத்தச் செல்வதே நூலக முகாமையாளரின் திறமையான முகாமைத்துவமாகும்.

Some Thoughts For Success!!!

- **A Smile carries miles.**
- **A Communication gap is often the cause of misuderstandings and disputes.**
- **Communication is meant to express, not impress.**
- **Creativity is finding out problems from solutions.**
- **Do what you can, with what you have, where you are.**
- **If you are positive about yourself others positively do.**
- **Language is the dress of thought.**
- **Money cannot buy justice, harmony,beauty or health.**

பொருளியல் சிந்தனையாளர் பக்கம்

தோமஸ் ரொபேட் மால்தஸ்
(1766 - 1834)
(Thomas Robert Malthus)

இங்கிலாந்தின் பழம் பொருளியல நிஞர்களுள் அடம் ஸ்மித், டேவிட் ரிக்காடோ ஆகியோர் வரிசையில் அடுத்து முக்கியத்துவம் பெறுபவர் தோமஸ் ரொபேட் மால்தஸ் ஆகும். இவர் இங்கிலாந்தில் 1766இல் பிறந்தார். கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்தின் பட்டதாரியான இவர் ஒரு பாதிரியாருமாவார். 1805 இல் கிழக்கிந்தியக் கம்பனியின் ஹெயிலிபரி (Hailybury) எனும் ஊரில் இந்திய அதிகார வர்க்கத்தினருக்கென்று நடத்திய பயிற்சிக் கல்லூரியில் பொருளாதார வரலாற்றுப் பேராசிரியராக நியமிக்கப்பட்டார். மால்தஸ் ரிக்காடோவின் நெருங்கிய நண்பராக இருந்த போதும் ரிக்காடோவின் பொருளாதாரச் சிந்தனைகளை சீர்தூக்கிப்பார்த்து விமர்சிப்பவராக இருந்ததுடன் அவை தொடர்பாக தமது கருத்துக்களையும் நூல்களில் குறிப்பிட்டார். மால்தஸ் எழுதிய நூல்களின் வரிசையில் பின்வருவன பிரதானமானவை.

1. மக்கள் தொகை பற்றிய கட்டுரைகள். (Essays on Population)
2. அரசியல் பொருளாதாரக் கோட்பாடுகள். (The Principles of Provisions Economy 1820)
1. பல வசதிகளுக்கு வழங்கப்படும் உயர்ந்த விலை. (High Prices of Provisions 1800)
2. தானியச்சட்டங்களின் விளைவுகள் பற்றிய ஆய்வு. (Observations on the Effect of the Corn Laws - 1814)
3. வாடகையின் இயல்பும் வளர்ச்சியும். (Nature and Prograss of Rent 1815)
4. தானிய இறக்குமதி தடைக்கொள்கை. (Grounds of an Openion of the Policy of Restricting the Importation of Foreign Corn 1815)
5. வறியோர் சட்டம். (The Poor Law - 1817)
6. மதிப்பை அளவிடுதல். (Measure of Value 1823)
7. அரசியல் பொருளாதாரம் பற்றிய வரைவிலக்கணம். (Definition of Political Economy - 1827)

மால்தஸ் எழுதிய நூல்களில் மக்கள் தொகைக் கோட்பாடு, செல்வத்தைப் பெருக்குவதற்கான வழிவகைகள், வாடகைக் கோட்பாடு, மிகையுற்பத்திக் கோட்பாடு, வறியோருக்கான பாதுகாப்புச் சட்டத்தின் பாதக விளைவுகள், கூலிக் கோட்பாடு என்பன முக்கியமானவையாகக் கூறப்படுகின்றது.

மக்கள் தொகை பற்றிய முழு அக்கறை கொண்ட மால்தஸ் மக்கள் தொகைப் பெருக்கத்தால் நாட்டுப் பொருளாதாரமும், நாட்டு மக்களும் கேடுறுகின்றனர் என்பதை வலியுறுத்தினார். சனத் தொகைப் பெருக்கத்துடன் உணவுப் பொருள் உற்பத்தி வேகத்தினை ஒப்பிட்டுள்ளார். மக்கள் தொகைப் பெருக்கம் இரண்டின் மடங்குகளாக பெருக்கல் எண் வளர்ச்சியில் செல்ல, உணவு உற்பத்திப் பெருக்கம் கூட்டல் எண் வேகத்திலும் பெருகிச் செல்கின்றது. முடிவில் மக்கள் தொகை பெருகி உணவுப் பொருள் பற்றாக்குறை, ஏனைய வசதிகளின் பற்றாக்குறை என்பன ஏற்பட மக்கள் நலன் கேடுறுகின்றது. இதன் தொடர்ச்சியாக வாழ்க்கைத்தரப் பின்னடைவும், நோய்களுடன் வாழ்ந்து பலர் இறக்கவும் நேரிடுகின்றது. எனவே முடிவில் சனத் தொகை வீழ்ச்சியடைகின்றது.

இத்தகைய விளைவுகளிலிருந்து விடுபடமக்கள் தொகைப் பெருக்கத்தை செயற்கையாகத் தடை செய்தல் வேண்டும் என மால்தஸ் குறிப்பிட்டார். அவை,

1. திருமணம் செய்யாதிருத்தல்
2. காலம் தாழ்த்தி திருமணம் செய்தல்
3. புலனடக்கம் என்பன

இத்தகைய தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளாத நிலையில் பஞ்சம், பட்டினி, வெள்ளம், போர் போன்ற இயல்புத் தடைகள் தோன்றித் தடுத்துவிடும் என்கின்றார். ஆனால் மால்தஸ் நவீன குடும்பக் கட்டுப்பாட்டு முறைகள் பற்றிக் குறிப்பிடவில்லை என்பது முக்கிய குறைபாடாகத் தென்படுகின்றது. மேலும் மால்தஸின் கோட்பாட்டில் செல்வத்தைப் பெருக்குவதற்கான வழிவகைகளைக் குறிப்பிட்டமையும், வறியோர் பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்தமையும் குறிப்பிடத்தக்கன. மால்தஸ் செல்வத்தைப் பெருக்குவதற்கான வழிவகைகள் எனப் பின்வருவனவற்றைக் குறிப்பிட்டுள்ளார்.

1. புதிய உற்பத்தி வழிமுறைகளை எல்லாத் துறைகளிலும் பயன்படுத்தல்.
2. நிலத்தை நன்கு பயன்படுத்தல்.
3. உற்பத்தி முறையில் புத்தாக்கங்களைகறப் பயன்படுத்தல்.
4. குளிர்ச்சியான காலநிலையின்போது தொழிலாளர்களின் உற்பத்தித் திறன் பெருகி செல்வமும் பெருகும் நிலை ஏற்படுதல்.
5. செல்வமும், வருமானமும் முறையாக மற்றும் சமமாகப் பகிர்வு செய்யப்படும் போது மக்களின் உற்பத்தித் தேவை மிகுதியாகும்போது செல்வமும் பெருகும்.

எனக் குறிப்பிட்டுள்ளார். வறியோர் பாதுகாப்புச் சட்டத்தை எதிர்த்தல் என்பதில் வறியோருக்கான மானியக்கொடுப்பனவுகள், அரசாங்க சலுகைகளை அனுபவிப்பதில் குறிப்பாய் இருத்தல், வாழ்க்கைச் செலவின் சுமை பற்றி அறியாதிருத்தல், சோம்பேறிகளாகுதல், என்பவற்றுடன் குடும்பங்களில் பிள்ளைகள் பெருகுதல் போன்ற பாதக விளைவுகளும் ஏற்படுகின்றது என விமர்சித்துள்ளார். அடுத்து ரிக்காடோ போன்று மால்தசும் குத்தகைக் கோட்பாடு, கூலிக் கோட்பாடு என்பவற்றின் அடிப்படை அம்சங்களில் மாறுபடாவிடினும் நிலத்தின் வளத்திற்கேற்ப வாடகை நிர்ணயிக்கப்பட்டபோதும் மக்கள் தொகை பெருகும்போது பண்டங்களுக்கான கேள்வி அதிகரித்து அதனால் விலை மட்டங்களும் உயர்வடைகின்றது. இது உற்பத்தி நிலங்களின் வாடகையினை உயர்த்தி விடுகின்றது. இவ் உயர்ச்சியானது வளம் நிறைந்த நில உடைமையாளர்கள் மிகுதியான வாரத்தைப் பெற வாய்ப்பு ஏற்படுகின்றது எனக் குறிப்பிட்டார். கூலிக் கோட்பாட்டில் தொழிலாளர் நிரம்பல்(ஊழிய நிரம்பல்) தொழிலாளர் கேள்வி (ஊழியக் கேள்வி) ஆகிய இரண்டும் கூலியை நிர்ணயித்தல், தொழிலாளர் உற்பத்தித் திறன் பெருக கல்வித் தரத்தை உயர்த்துதல், ஊழியர்களுக்கு முழுமையான சுதந்திரம் வழங்குதல், எதிர்காலம் பற்றிய உறுதியான நம்பிக்கையை உறுதிசெய்தல் என்பன ஏற்படுத்தப்படல் வேண்டும் எனக் குறிப்பிட்டார்.மற்றும் மால்தஸ்சின் சிந்தனையில் எழுந்த மிகை உற்பத்திக் கோட்பாடு(Theory of Market Gluts) தவிர்க்கமுடியாததாகும். பேரளவு உற்பத்தி முறையின் முடிவான விளைவுகளைக் கொண்டு மால்தஸ் மிகை உற்பத்திக் கோட்பாட்டினை விளக்கினார். J.B.சே விளக்கியவிதியான "நிரம்பல் அதற்கான கேள்வியை உருவாக்குகின்றது"(Supply Creats Its Own Demand) என்பதை மறுத்துரைத்தார். மக்களின் வாங்கும் திறன் குறையும்போது சந்தையில் பொருள் தேங்கி விடுகின்றது. பண்டங்களுக்கான உறுதிக் கேள்வி(Effective Demand) குறைந்துவிடாது பார்த்துக் கொள்ள வேண்டும். இது குறைந்துவிடின் சந்தையில் மிகை நிரம்பல் ஏற்பட்டு தொழில்கள் பாதிக்கப்பட்டு மூடப்படும் நிலை உருவாகும். இம்மந்த நிலையைப் போக்க அரசாங்கம் செலவைப் பெருக்கி மக்களுக்கு வேலைவாய்ப்பை அதிகரிக்க வேண்டும். இது வருமானத்தைப் பெருக்கி வாங்கும் திறனை அதிகரிக்கும் போது மிகை உற்பத்தி நிலை நீக்கப்பட்டுவிடும் எனக் குறிப்பிடுகின்றார்.

எனவே பழம் பொருளியல் சிந்தனைகளில் மால்தசின் சிந்தனை முன்னையோரின் கருத்துக்களிலிருந்து எழும் குறைபாடுகளுக்கான மாற்று வழியாகவும், அவை விரிவாக்கப்பட வேண்டியதன் அவசியத்தினையும் வலியுறுத்துகின்றது.

இலங்கையில் உயர்நிலையிலுள்ள 10 கம்பனிகள்
(Corporate Top 10)

இலங்கையில் முன்னணி நிலையிலுள்ள கம்பனிகளை Business Today என்ற சஞ்சிகை வருடாந்தம் தரப்படுத்துகின்றது. இத்தரப்படுத்தலை மேற்கொள்வதற்கான தகைமைப் புள்ளிகளைப் பின்வரும் பிரமாணங்களின் அடிப்படையில் பெற்று கணிப்பிட்டு நிரற்படுத்தப்படுகின்றது.அவை.

1. விற்பனைப் புரள்வு
2. விற்பனைப் புரள்வு வளர்ச்சி
3. இலாபத்தன்மை
4. சாதாரண பங்குகள் மீதான வருவாய்
5. இலாபத்தன்மையின் வளர்ச்சி
6. தலா ஊழியருக்கான சேர்க்கப்பட்ட பெறுமதி.
7. சந்தை மூலதன மயமாக்கம்
8. பரிமாற்றப்படும் பங்குகளின் பெறுமதி
9. கூட்டிய பெறுமதி
10. சமூகப் பொறுப்பு
11. உற்பத்தியின் / சேவையின் தரம்

இவற்றின் அடிப்படையில் பின்வரும் நிறுவனங்கள் முன்னணி 10 நிறுவனங்களாக தரப்படுத்தப் பட்டுள்ளன. இம்முறை தலா ஊழியருக்கான சேர்க்கப்பட்ட பெறுமதி என்பதற்குப் பதிலாக தலா ஊழியருக்கான இலாபம் என்ற விடயம் சேர்க்கப்பட்டுள்ளது.

மேலே கூறப்பட்ட தரப்படுத்தல் பிரமாணங்களில் சமூகப் பொறுப்பு மற்றும் உற்பத்தியின் அல்லது சேவையின் தரம் என்பன மொத்த ரீதியாக எதிர்வு கூறப்படும் ஒரு ஆர்வலர் குழுவின் ஊடாக மேற்கொள்ளப்படுகின்றது.

தரப்படுத்தல் அட்டவணை

99/00	98/99	நிறுவனங்கள்	99/00	98/99
1	1	Johnkeells Holdings	6.77	5.80
2	2	National Development Bank	5.08	5.76
3	4	Hatton National Bank	4.99	5.04
4	9	Commercial Bank	4.68	2.76
5	10	Distilleries Company of Sri Lanka	4.34	2.08
6	7	Caltex Lubricants Lanka	4.24	3.75
7	3	Ceylon Tobacco Company	3.69	5.32
8	-	Nestle	3.46	2.79
9	5	Hayleys	3.38	3.88
10	6	DFCC Bank	2.26	3.82

இந்தத் தரப்படுத்தலில் John keells கம்பனியானது தொடர்ந்து மூன்று வருடங்களாகவும் முதலாவதாகவே தரப்படுத்தப்பட்டுக் காணப்படுகின்றது இதற்கு இந்நிறுவனத்தின் அளவு, விரிவாக்கம், இலாபம் ஈட்டும் ஆற்றல், முகாமைத்துவத்திறன் என்பன குறிப்பிடப்படுகின்றது.அதே போல் தேசிய அபிவிருத்தி வங்கி தொடர்ந்தும் இரண்டாம் இடத்திற்கு வந்துள்ள போதிலும் John keells நிறுவனத்துடன் ஒப்பிடும் பொழுது இம்முறை இது கூடியளவு வீழ்ச்சியினைக் காட்டி நிற்கின்றது. வணிக வங்கிகள் துறையில் கற்றன் நஷனல் வங்கி 98/99 காலப்பகுதியுடன் ஒப்பிடும் பொழுது ஒரு படி மேலேறி மூன்றாவது இடத்தினைப்

பிடித்துள்ளது. இலங்கையின் தனியார் துறை நிதி நிறுவனங்களில் மிக அண்மைக்காலத்தில் கூடிய அடைவு மட்டத்தினைக் காட்டிய முதன்மையான நிதி நிறுவனமாக ஹற்றன் நஷனல் வங்கி கிராமிய மக்களுக்கான சேவைகளை வழங்கியும், கிராமிய மக்களின் வாழ்க்கைத்தரத்தினை உயர்த்துவதிலும் முக்கிய பங்காற்றி வருகின்றது.

Distilleries கம்பனி இம்முறை 5வது இடத்திலும், Caltex Lubriants lanka Ltd ஆறாவது இடத்திலும் உள்ளது. இங்கு Distilleries சென்றாண்டு பத்தாவது இடத்திலிருந்தமையும் குறிப்பிடத்தக்கது. Ceylon Tobcco Company Ltd ஆனது சென்றாண்டிலிருந்து நான்கு படிகள் பின்தள்ளப்பட்டுள்ளது. இந் நிலைமை சேர்க்கப்பட்ட பெறுமதி குறைவடைந்தமை, வாழ்க்கைச் செலவு அதிகரித்தமை புகைத்தல் பொருட்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் பிரச்சார நடவடிக்கைகள் என்பன இதன் சந்தை நடவடிக்க்ககளைப் பாதித்திருந்தமையும் காரணங்களாகக் அமையலாம் எனக் கூறப்படுகின்றது. இருப்பினும் Ceylon Tobcco Company Ltd மட்டுமே உயர் நிலையிலுள்ள 10 கம்பனிகளுள் ஒரு தயாரிப்பு நிறுவனமாக உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

Hayleys இலங்கையின் கம்பனிகளின் தொழிற்பாட்டில் ஒரு குறிப்பிடத்தக்க கம்பனியாக தொடர்ந்தும் இயங்கிவருகின்றது. இதன் செற்பாடும் நிலைத்து நிற்றலும், பங்களிப்பும் தனியார்துறையின் அபிவருத்திக்கு தொடர்ந்தும் உந்து சக்தியாக உள்ளது. எனினும் இது சென்றாண்டை விட நான்கு படிகள் கீழ் இறங்கி ஒன்பதாவது இடத்திலுள்ளது. இது நாட்டில் நிலவும் நிச்சயமற்ற வர்த்தகச் சூழ்நிலையால் ஏற்பட்டுள்ளது. அடுத்து பங்குச் சந்தையில் முக்கியத்குவம் பெறும் (Blue-Chip) ஒரு கம்பனியாக DFCC வங்கி காணப்படுகின்றது., பாரம்பரியமான வங்கிச் சேவைகளுக்கப்பால் நின்று நிதிநடவடிக்கைகளின் அபிவிருத்தியில் ஈடுபட்ட 10 முன்னிலை நிறுவனங்களுள் ஒன்றாகத் தனது நிலையினைத் தக்கவைத்துள்ளது. இவற்றுக்கு மேலாக பொருட்களை வழங்கும் நிறுவனமான நெஸ்ரில் கம்பனி முதற்தடவையாக முதற்தர10 கம்பனிகளுள் புதிதாக நுழைந்து 8ம் இடத்தினைக் கைப்பற்றியுள்ளது.

மேலும் இலங்கையிலுள்ள பெரிய தனியார்துறை வங்கியான ஹற்றன் நஷனல் வங்கி நாடளாவிய ரீதியில் 107 கிளைகளையும்,, 3500 ஊழியர்களைக் கொண்டதாகவும் காணப்படுகின்றது. 1970ம் ஆண்டு முதல் கிராமிய அபிவிருத்தியிலும் மக்களின் வாழ்க்கைத் தர உயர்விலும் முக்கிய பங்காற்றி முன்மாதிரியாகத் தொழிற் பட்டுவருகின்றது. 150,000க்கும் மேற்பட்ட கிராமிய வாடிக்கையாளர்களைக் கொண்டதாகவும், ரூ.2000மில்லியனிற்கும் மேற்பட்ட சேமிப்பினை நடைமுறைப்படுத்துகின்றது.

இந்த உயர்நிலை அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 10 நிறுவனங்களுள் மட்டக்களப்பு மாவட்டத்தில் இயங்கும் ஒரே ஒரு நிறுவனமாக ஹற்றன் நஷனல் வங்கி காணப்படுகின்றது. மக்கள் மத்தியில் பிரபல்யம் பெற்றுள்ள இவ் வங்கி இப் பிரதேசத்திலும் தனது பணிகளைத் தொடர்வதுமல்லாமல், பாடசாலை மாணவ மாணவிகளிடையும் சேமிப்பு பழக்கத்தை வெகுவாக ஊக்குவித்து வருகின்றது. இவ்வங்கியின் அடகுசேவை குறைந்த வட்டி வீதத்துடன் கூடிய கடன் தொகையை வழங்கிவருகின்றது. தற்போது அதிகூடிய வட்டி வீதமான 18% ஐ நிலையான வைப்புகளுக்கு வழங்குகின்றது. மேலும் வதியாதோர் சேமிப்பு கணக்கு, வதிவோர் சேமிப்புக் கணக்குகளை ஆரம்பித்து நடைமுறைப்படுத்தி வருகின்றது. இவ்வாறாக இப்புதிய நூற்றாண்டின் நவீன யுத்திகளை வங்கித் துறையில் புகுத்தி வங்கித் துறையின் முன்னோடியாக இயங்கி வருவது இங்கு குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் தனியார்மயமாக்கல் நிகழ்ச்சித்திட்டத்தின் செயலாற்றம்

அரச தொழில் முயற்சிகள்	தனியார் மயமாக்கல் ஆண்டு	பெறப்பட்ட தொகை உள்நாடு மில். ரூபா	பெறப்பட்ட தொகை வெளிநாடு மில். ரூபா	பெறப்பட்ட தொகை மொத்தம் மில். ரூபா
யுனைட்டட் மோட்டர்ஸ்	1989	5.0	90.00	95.00
வரையறுக்கப்பட்ட துல்கிரிய புடவை ஆலை	1990	-	200.00	200.00
வரையறுக்கப்பட்ட பூகொடை புடவை ஆலை	1990	60.00	30.00	90..00
வரையறுக்கப்பட்ட லங்கா ஒட்சிசன்	1990	27.62	60.00	87.62
வரையறுக்கப்பட்ட தங்கொட்டுவ புரொசலைன்	1990	-	101.78	101.78
ஹோட்டல் த புகாரி	1990	7.43		7.43
வரையறுக்கப்பட்ட இலங்கை தோல் உற்பத்திகள்	1991	17.04		17.04
குணாஸ் போல்ஸ் கோட்டல்	1991	16.00		16.00
வரையறுக்கப்பட்ட வங்கா லோக வன்கலம்	1991	30.00		30.00
வரையறுக்கப்பட்ட இலங்கை மில்க் பூட்ஸ்	1991	755.33		755.33
வரையறுக்கப்பட்ட ஆசிய ஹோட்டல் கூட்டுத்தாபனம	1992	356.38	597.25	953.33
வரையறுக்கப்பட்ட இலங்கை எண்ணெய் கொழுப்பு	1992	6.77	74.45	81.22
நொலோன் 6 பொறிகள்	1992	227.70	227.70	227.70
களனி டயர்	1992	549.21	40.00	589.21
வரையறுக்கப்பட்ட வெயாங்கொட புடைவை ஆலைகள்	1992	403.50		403.50
வரையறுக்கப்பட்ட இலங்கை வடிசாலைக் கம்பனி	1992	1378.64	169.36	1548.00
வரையறுக்கப்பட்ட மகாவலி மனான் சீமெந்துக் கம்பனி	1992	82.67		82.67
வரையறுக்கப்பட்ட இலங்கை போகல கிரபைட்	1992	111.84		111.84
வரையறுக்கப்பட்ட லங்கா செரமிக்ஸ்	1992	1330.89	56.25	1387.14
வரையறுக்கப்பட்ட சதோச மோட்டர்ஸ்	1992	24.75	49.50	74.25
வரையறுக்கப்பட்ட தனியார் ககட்டக கிரபைட்	1992	16.50		16.50
வரையறுக்கப்பட்ட (தனியார்) லங்கா புரொலைன்	1992	-	95.42	95.42
வரையறுக்கப்பட்ட சதோச கொம்பியூட்டர் சேர்விசஸ்	1992	1.50		1.50
சிலோன் சிப்பிங் லைன்ஸ்	1992	51.31		51.31
தேசிய அபிவிருத்தி வங்கி	1992	501.90	4495.18	4997.08
ஹிங்குரான சீனிக் கைத்தொழில்கள்	1992	25.00		25.00
வரையறுக்கப்பட்ட ஒக்லான்ட் காப்புறுதிப் பணிகள்	1993	13.84		13.84
ரான்ஸ் ஏசியா கோட்டல் (ரமடா)	1993	562.18	562.17	1124.35
கோட்டல் சேர்விசஸ் (சிலோன் இன்ரகொண்டிசென்சல்)	1993	181.00		181.00
வரையறுக்கப்பட்ட ருகுணு சீமெந்துக் கம்பனி	1993	219.00		219.00
வரையறுக்கப்பட்ட மக்கள் வணிக வங்கி	1993	136.25	18.75	155.00
வரையறுக்கப்பட்ட சீ.சீ.சீ. (பொறியியல்)	1993	49.45		49.45
வரையறுக்கப்பட்ட மத்தேகம் புடவை ஆலைகள்	1993	-	2.03	2.03
வரையறுக்கப்பட்ட கொழும்பு சருவதேசபள்ளிக்கூடம் (இலங்கை)	1993	-	90.27	90.27
வரையறுக்கப்பட்ட லங்கா களரிஸ்	1993	102.50		102.50
வரையறுக்கப்பட் புத்தளம் சீமெந்துக் கம்பனி	1993	914.61	1113.61	2028.42

வரையறுக்கப்பட்ட லங்கா டிராக்டர்ஸ்	1994	144.48		144.48
வயம்பா அக்ரோ பேட்புலைசர் கம்பனி	1994	22.78		22.78
வரையறுக்கப்பட்ட தேயிலை சிறு உடமையாளர் தொழிற்சாலைகள்	1994	140.96		140.96
ருகுணு அக்ரோ போட்டிலைசர் கம்பனி	1994	26.58		26.58
வரையறுக்கப்பட்ட லங்கா லுப்ரிக்கன்ஸ்	1994	547.24	395.60	942.54
வரையறுக்கப்பட்ட கந்தளாய் சீனி தொழிற்சாலை	1994	517.24		517.24
வரையறுக்கப்பட்ட சீ.சீ.சீ வளமாக்கி	1994	42.78		42.78
இலங்கை ஒட்டுப்பலகை (ஜின்தொட்டை)	1994	27.83		27.83
வரையறுக்கப்பட்ட இன்டர்கொன் றப்பர்	1995	17.77		17.77
வரையறுக்கப்பட்ட பொகவந்தலாவ பிளான்டேசன்	1995	278.95		278.95
வரையறுக்கப்பட்ட கொட்டகல பிளான்டேசன்	1995	138.99		138.99
மூலதன அபிவிருத்தி முதலீட்டுக் கம்பனி	1995	371.17		371.17
வரையறுக்கப்பட்ட கேகாலை பிளான்டேசன்	1995	257.34		257.34
வரையறுக்கப்பட்ட அகலவத்தை பிளான்டேசன்	1995	271.45		271.45
வரையறுக்கப்பட்ட கொம்பு வாயு கம்பனி	1995		1997.77	1997.77
வரையறுக்கப்பட்ட வட்டவல பிளான்டேசன்	1995	361.49		361.49
வரையறுக்கப்பட்ட ஹொரண பிளான்டேசன்	1995	259.36		259.36
வரையறுக்கப்பட்ட களனிவலி பிளான்டேசன்	1995	261.32		261.32
வரையறுக்கப்பட்ட மஸ்கெலியா பிளான்டேசன்	1996	275.05		275.05
வரையறுக்கப்பட்ட மடு சீம பிளான்டேசன்	1996	102.00		102.00
வரையறுக்கப்பட்ட ஓரியன் லங்கா	1996		1000.00	1000.00
றஜரட்ட அக்ரோ பேர்ட்டிலைசர் கம்பனி	1996	60.10		60.10
வரையறுக்கப்பட்ட அக்கறைப்பத்தனை பிளான்டேசன்	1996	267.95		267.95
வரையறுக்கப்பட்ட கம்புகஸ்தனை பிளான்டேசன்	1996	242.30		242.30
வரையறுக்கப்பட்ட பலாங்கொட பிளான்டேசன்	1996	420.75		420.75
வரையறுக்கப்பட்ட உடப்புசல்லாவ பிளான்டேசன்	1996	316.14		316.14
வரையறுக்கப்பட்ட இலங்கை உருக்கு கூட்டுத்தானம்	1996	-	849.45	849.45
வரையறுக்கப்பட்ட லங்கா சோல்ட்	1997	452.81		452.81
வரையறுக்கப்பட்ட புத்தளம் சோல்ட்	1997	122.50		122.50
வரையறுக்கப்பட்ட நமுணுகல பிளான்டேசன்	1997	409.27		409.27
வரையறுக்கப்பட்ட மதுருட்ட பிளான்டேசன்	1997	467.95		467.95
வரையறுக்கப்பட்ட மல்வத்தவெலி பிளான்டேசன்	1997	623.24		623.24
வரையறுக்கப்பட்ட காவத்த பிளான்டேசன்	1997	308.55		308.55
வரையறுக்கப்பட்ட எல்பிட்டிய பிளான்டேசன்	1997	308.82		308.82
வரையறுக்கப்பட்ட இலங்கை டெலிகொம்	1997	-	13387.99	13387.99
வரையறுக்கப்பட்ட தலவாக்கல்ல பிளான்டேசன்	1997	408.00		408.00
வரையறுக்கப்பட்ட புசல்லாவ பிளான்டேசன்	1997	397.80		397.80

மூலம் : சுதந்திர இலங்கையின் பொருளாதார முன்னேற்றம் இலங்கை மத்தியவங்கி - 1998

உங்களது கணக்கு மூலம்
உங்களுக்கு அதிர்ஷ்டம்

மட்டக்களப்பு பிராந்தியம் மக்கள் வங்கி

அளப்பரிய நல்லதிர்ஷ்டத்துடனும், விலைமதிப்பற்ற பரிசுகளுடனும், மக்கள் வங்கியின் ஜயஸ்ரீ 2 தான் உங்களது நல்லதிர்ஷ்டத்துக்கான தாரக மந்திரம். ஜயஸ்ரீ 2 ன் மூலம், அதிர்ஷ்டச் சீட்டிழுப்பிற் பரிசு பெறும் வாய்ப்பு ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு மாதமும், ஒவ்வொரு வலயத்திலும், ஒவ்வொரு வருடமும் உங்களுக்கு உண்டு, எந்தவொரு சேமிப்புக் கணக்கும், நடைமுறைக் கணக்கும் இந்தச் சீட்டிழுப்புக்குத் தகுதி கொண்டன என்பதே - முக்கியமான விடயம்.*

ஜயஸ்ரீ 2 ல் தகுதி பெறுவதற்கு நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் - ஒரு மாதம் முழுவதற்கும் உங்கள் நடைமுறைக்கணக்கில் ஆகக் குறைந்த நிலுவையாக ரூ. 5,000/- ஐ அல்லது உங்கள் சேமிப்புக் கணக்கில் ஆகக் குறைந்த நிலுவையாக ரூ 10,000/- ஐ வைத்திருப்பதேயாகும். அதுமட்டுமல்ல, உங்களது கணக்கிற் சேரும் ஒவ்வொரு மேலதிக ரூ. 5,000/- மும் உங்களது வெற்றிபெறும் சந்தர்ப்பங்களை அதிகரிக்கும் என்பதையும் நினைவில் வைத்திருங்கள். நீங்கள் அதிகமாகச் சேமியுங்கள்! அதிகம் பரிசுகளைப் பெறுவீர்கள்!!

*வனிதா வாசனா மற்றும் NRFC/RFC ஆகிய சேமிப்புக் கணக்குகள் மாத்திரம் இத்திட்டத்தில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது

- தினம் - 12 தங்க நாணயங்கள்
- மாதம் - ஒரு மோட்டார் கார், 3 கணனிகள்,
  5 மோட்டார் சைக்கிள்கள், 5 ஸ்கூட்டர்கள்,
  5 குளிர்சாதனப் பெட்டிகள்
- வலய அதிர்ஷ்டச் சீட்டிழுப்புக்கள் - ஒரு மோட்டார் படகு. ஒரு உழவு இயந்திரம், 5 கை இயக்க உழவு இயந்திரம், 10 தங்க நாணயங்கள்
- வருடம் - ஒரு மொன்டிறோ ஜீப்